விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 07 வியாழக்கிழமை (23.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

# பிரபாகரனின் பாதையில் வடக்கு அரசியல்வாதிகள்

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு



(கொழும்பு) தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பயணித்த பாதையில் வடக்கு அரசியல்வாதிகள் பயணிப்பதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது. வட மாகாணசபையும் வடக்கிலுள்ள அரசியல்வாதிகளும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித் தலைவரும் ஊடகத்துறை பிரதியமைச்சருமான கருணாசேன பரணவிதான தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)

ஓமந்தை பகுதியில்

## பேருந்து விபத்து பலர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை இராணுவ பாதுகாப்பு சாவடிக்கு அருகே நேற்று மாலை 5 மணியளவில் தனியார் பேருந்து விபத்துக்குள்ளா 23☛

## ரணில் – மோடி இன்று சந்திப்பு

(புதுடில்லி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தினூடாக புதுடில்லியை சென்றடைந்தார்.

இந்திரா காந்தி சர்வ 23☛

உள்ளூராட்சி தேர்தலை

## பிற்போடுவதற்கு மகிந்த எதிர்ப்பு

(கொழும்பு)

மிக விரைவில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி குருநா 23☛

## ஆவா குழுவின் உளவாளியாக செயற்பட்ட இளைஞன் கைது

### வெள்ளை வானில் கடத்தியதால் பேருந்து நிலையத்தில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வான் கடத்தல் போன்று வாள்வெட்டு சந்தேக நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கடத்தியமையால் யாழில் நேற்று முன்தினம் பதற்றம் நிலவியது.

மாவீரர் வாரம் தற்போது நடைபெற்று வரும் நிலையில் இந்த பதற்றம் மேலும் அதிகரித்து காணப்பட்டிருந்தது. எனினும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நின்றிருந்த இளைஞனை தாம் கடத்த 23☛

மன்னார் மாவட்டத்தின்

## புதிய ஆயராக பெர்னான்டோ நியமனம்



(மன்னார்)

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு மறை மாவட்டத்தின் துணை 24☛

கைமோசக் கொலைக் குற்றத்துக்கு

## தந்தை, மகனுக்கு கடூழிய சிறை யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் மருமகனை கொலை செய்த குற்றச்சாட்டில் கைமோசக் கொலை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட மாமனாருக்கு 7 ஆண்டு கால கடூழிய சிறைத் தண்டனையும் அவரது மகனுக்கு 2 ஆண்டு 23☛

## எந்தவித அரசியல் கலப்பின்றி மாவீரர் நாளை அனுஷ்டிக்குக

### மாவை சேனாதிராசா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எந்தவிதமான அரசியல் கலப்புமஇன்றி அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து மாவீரர் நாளை புனித தினமாக அனுஷ்டிக்க முன்வர வேண்டும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமா 23☛

இடைக்கால அறிக்கை தொடர்பில்

## சுமந்திரனுடன் விவாதத்துக்கு தயார் சவாலை ஏற்றார் சட்டத்தரணி சுகாஸ்



(யாழ்ப்பாணம்)

இடைக்கால அறிக்கையில் ஒன்றும் இல்லை என கூறுபவர்கள் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் விடுத்த சவாலை 24☛




இலங்கையில் முன்னெடுக்கப்படும்

## நல்லிணக்க செயற்பாடு குறித்து ஐ.நா சபையில் விளக்கம்

(ஜெனிவா)

இலங்கை முன்னெடுக்கும் சமாதான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை ஐ.நா சபை 24☛

## உள்ளூராட்சி மன்ற வர்த்தமானிக்கு செப்.4 வரை இடைக்காலத் தடை

### தேர்தல் அறிவிப்பும் தாமதமாகும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் மற்றும் உறுப்பினர்களை அதிகரிப்பது தொடர்பில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ஆம் திகதிவரை இத்தடையுத்தரவு விதிக்கப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான குறித்த வர்த்தமானி அறிவித்தல், நீண்ட இழுபறிக்கு பின்னர் கடந்த 11ஆம் திகதி வெளியானது. 23☛

தருமபுர பொலிஸ் பிரிவில்

## மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 லீற்றர் கசிப்பு கைப்பற்றல்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பிரமந்தனாறு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 லீற்றர் கசிப்பினைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளரையும் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டபிள்யூ. விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் 24☛

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி



(கரணவாய்)

குளிர்சாதனப் பெட்டியை திறக்க முற்பட்ட வர்த்தகர் ஒரு 23☛

## காதலியின் உறவினருக்கு பயந்து ஒளித்த மாணவன் மீது கற்பாறை விழுந்து உயிரிழப்பு

(கொழும்பு)

காதலியின் உறவினர்கள் மீதான பயத்தால் கற்குவியல் ஒன்றுக்கு அருகில் மறைந்து இருந்த பாடசாலை மாணவன் ஒருவன் மீது கற்பாறை ஒன்று விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று பாதுக்கை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பாதுக்கை, மீரியாகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய அரத்புலிகே ஜானக குமார என்ற மாவத்தகம வித்தியாலயத்தில் தரம் 11ல் கல்வி கற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காதலியுடன் விடுதி ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இதன்போது காதலியின் உறவினர்கள் அந்த இடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இதனையடுத்து அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்ற மாணவன், கற்குவியல் நிறைந்துள்ள காட்டுப்புதர் பகுதிக்கு சென்று மறைந்துள்ளான். இதன்போது மேலே இருந்த கற்பாறை ஒன்று மாணவன் மீது விழுந்ததையடுத்து மாணவன் உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்கை பொலிஸார் முன்னெடுக்கின்றனர். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## இளவாலை பகுதியில் பொலிஸார் சுற்றிவளைப்பு

(இளவாலை)

இளவாலை சேந்தாங்குளம், மாதகல், குஸ்மந்தாந்துறை போன்ற மீன்பிடித்துறைகள் நேற்று புதன்கிழமை காலை 5 மணியளவில் காங்கேசன்துறைப் பிரிவு இல.01 உதவிப் பொலிஸ் அந்தியட்சகர் சிசில குமார ஹேரத் தலைமையிலான 100 கரும் மேற்பட்ட பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

கரையோரங்கள் அதனையண்டிய பகுதிகளிலுள்ள வீடுகள் பற்றைகள் மற்றும் மீன்பிடிப் படகுகள் போன்றவற்றை சோதனையிட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேற்படி நடவடிக்கை சுமார் 3 மணித்தயாலங்களுக்கு மேற்கொள்ளப்பட்மை குறிப்பிடத்தக்கது. (ம-104)

**யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி**
**பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்**


**காலம்:**-26.11.2017 ஞாயிறு பி.ப 2.30 மணி
**இடம்:**-கல்லூரி பிரதான மண்டபம்
**தலைமை:**-கல்லூரி முதல்வர் திரு.கு.ரவிச்சந்திரன்

மேற்படி கூட்டத்திற்கு கல்லூரியின் பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

20.11.2017 (1431) திரு.த.பரராசசிங்கம் J.P
செயலாளர்

# வருடங்கள் இருபத்திரண்டு நிறைவில்

தோற்றம்
03 - 11 - 1941



மறைவு:-
23-11-1995



தோற்றம்
18 - 08 - 1983

வருடங்கள் இருபத்திரண்டு உருண்டு மறைந்தாலும்
இருவரின் நினைவுமெம் இதயத்தால் மறையாது
உருக்கமுடன் நாமின்று உள்ளத்தால் உமை நினைந்து
பெருமான் சந்நிதியில் பொறுமையுடன் வணங்குகின்றோம்.

அமரர் கனகசபை சண்முகசுந்தரம்
(ஸ்தாபகர் சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்)

அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்
(மாணவன் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

(1447)

முகவரி:-துர்க்கா இல்லம்
29, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை சிவகுமாரன் (சிவா)

**(உரிமையாளர்; அபிராமி உணவகம், கரணவாய் மத்தி)**

**பிறப்பு:-19.05.1975**
**இறப்பு:-22.11.2017**

தாவளை, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுமாரன் அவர்கள் 22.11.2017 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-காலஞ்சென்ற பாரிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரும், கர்ணா அவர்களின் பாசமிகு கணவரும், நித்சலா, பிரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், துளசிகா, க.விஜயகுமாரன், ச.நாகேஸ்வரி, க.பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.11.2017) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் கரணவாய் மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி, கரவெட்டி.
தொடர்பு:-0776357494

தகவல்:
குடும்பத்தினர்

(C-472)

# மின்சாரக் கதிரை அச்சத்தையும் ஊழல் ஆட்சியையும் ஒழித்தேன்

## நல்லாட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து மைத்திரி பெருமை

(கொழும்பு)

**மின்சாரக் கதிரை பற்றிய அச்சம், சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைப் பொறிமுறை மற்றும் சர்வதேச நீதிபதிகளை நாட்டிற்குள் வரவழைத்தல் போன்ற விடயங்கள் நல்லாட்சிக் காலத்தில் முற்றாக நீக்கப்பட்டதோடு ஊழல் ஆட்சியும் ஒழிக்கப்பட்டது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெருமையுடன் தெரிவித்துள்ளார்.**



மூன்று வருடங்களிற்கு முன்னர் இது போன்றவொரு நாளில் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அப்போதிருந்த ஆட்சியிலிருந்து வெளியேறியதுடன் அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பல விடயங்கள் நிறைவுடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். தேசிய மின் கட்டமைப்பிற்கு 100 மெகாவோட் சூரிய சக்தி ஒன்றிணைக்கப்படுவதை நிறைவுகூரும் முகமாக நேற்று முன்தினம் பிற்பகல் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று என் மீது எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் நல்லாட்சிக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்திற்கேற்ப, ஊழல், மோசடி, திருட்டு மற்றும் வீண்விரயம் என்பவற்றுடன்கூடிய ஊழல் அரசியலை நாட்டில் இல்லாமற்செய்து சிறந்த பண்புகளுடன் கூடிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி தெரிவித்தார்.

நல்லாட்சிக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் சித்தியடைந்துள்ளதா இல்லையா? என்பது குறித்து தற்போது யாராலும் உறுதிப்படுத்த முடியாது என்பதுடன் நல்லாட்சி அரசின் பதவிக்காலம் நிறைவடைகையில் தாம் சித்தியடைந்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களையும் தரவுகளையும் முன்வைக்கக்கூடிய ஆற்றல் தமக்கு காணப்படுகின்றதென ஜனாதிபதி தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நாடு எதிர்நோக்கியிருந்த பாரிய சவாலான விடயமாகக் காணப்பட்ட சர்வதேசத்தை வெற்றி கொள்ளும் சவாலினை வெற்றி கொண்டது மட்டுமன்றி உலகின் அனைத்து நாடுகளுடனும் சர்வதேச அமைப்புக்களுடனும் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள தற்போதைய அரசாங்கத்தினால் முடிந்துள்ளதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நாட்டின் மேலும் பல இலக்குகளும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

நாட்டிற்கு விதிக்கப்படவிருந்த பல்வேறு சர்வதேச தடைகள் நீக்கப்பட்டமை, அன்றைய அரசியல் மேடைகளிலும் ஊடகங்களிலும் அடிக்கடி பேசப்பட்ட மின்சாரக் கதிரை பற்றிய விடயங்கள், சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைப் பொறிமுறை மற்றும் சர்வதேச நீதிபதிகளை நாட்டிற்கு வரவழைத்தல் பற்றிய விடயங்கள் முற்றாக நீக்கப்பட்டமை, 19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக மனித உரிமைகளை பலப்படுத்தி, சகல துறைகளும் சுயாதீனமாக செயற்படக்கூடியவாறு சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டமை மற்றும் அரச தலைவர்களால் நீதிமன்ற செயற்பாடுகளில் மேற்கொள்ளக்கூடிய தலையீடுகளை முற்றிலுமாக இல்லாமற்செய்து சட்டத்தின் ஆதிக்கத்தினை உறுதிசெய்தமை என்பன பெற்றுக்கொள்ளப்பட்ட சில வெற்றிகளாகும்.

அத்துடன் நாடு எதிர்நோக்கிய கடன்சுமையைக் குறைத்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினால் தற்போது சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் ஏற்படாது மூன்று வருடங்களிற்கு முன்னர் காணப்பட்ட நிலைமையே நாட்டில் காணப்பட்டிருப்பின், நாடு இன்று எதிர்நோக்கியிருக்கக்கூடிய நிலைமையை சகலரும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (இ-7)

# பிரபாகரனின் பாதையில் வடமாகாணசபை பயணம்


## பதறுகிறார் பரணவிதான

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாதையில் பயணித்து மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தவே வடக்கின் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். கலவரத்தின் மூலமாக தமிழர்களை அழிக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என பிரதியமைச்சர் கருணாசேன பரணவிதான தெரிவித்தார்.

வடமாகாண கல்வி அமைச்சரின் செயற்பாட்டில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மௌனம் காக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் வடக்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வடமாகாண கல்வி அமைச்சர் தேசிய கொடியை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதாக கூறி தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் விமர்சிக்கப்பட்டுவரும் நிலையில் ஜாதிக ஹெல உறுமய நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கட்சியின் பிரதித் தலைவர் பிரதியமைச்சர் கருணாசேன பரணவிதான இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலுக்கு தடை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு மேன்முறையீட்டு நீதி மன்றம் இடைக் காலத்தடை விதித்து நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த இடைக் காலத்தடையுத்தரவு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

உள்ளூராட்சி மன்ற எல்லை மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கிய வரத்தமானி அறிவித்தல் செயற்பாட்டை தடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த இடைக் கால தடை யுத்தரவை பிறப்பித்துள்ளது.

கொழும்பு, கண்டி, மாத்தறை, எம்பிலிப்பிட்டிய, ஹாலி எல ஆகிய உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித் துவப்படுத்தும் 6 பேர் குறித்த வர்த்தமானிக்கு எதிராக தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை மூவரடங்கிய மேன்முறையீட்டு நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று ஆராயப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் இராஜினாமா!



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பிரியன்ஜித் வித்தாரன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் போதே, பிரியன்ஜித் வித்தாரன தனது இராஜினாமாக் கடிதத்தை வழங்கியதாக தேசிய சுதந்திர முன்னணியின் இளைஞர் இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் பத்மா உதயசாந்த குணசேகர தெரிவித்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே பிரியன்ஜித் வித்தாரன இராஜினாமா செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தேசிய சுதந்திர முன்னணி தேசிய அமைப்பாளர் பியசிறி விஜயநாயக்கவும் கட்சியின் தலைவர் விமல் வீரவன்சவை விமர்சனம் செய்து விட்டு இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜிந்தோட்டை சம்பவம்; சமூக ஊடகங்களின் செயற்பாடு குறித்து சி.ஐ.டி. விசாரணை!



(கொழும்பு)

ஜிந்தோட்டை சம்பவம் தொடர்பில் சமூக ஊடகங்களில் திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் பரப்பப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கடந்த காலங்களில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள் ஜிந்தோட்டை சம்பவத்துடன் தொடர்பு படுத்தி பரப்பப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவினர் விசாரணைகளைப் முன்னெடுத்துள்ளதாகவும், அவ்வாறான பொய்யான தகவல்களை பரப்பி இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உண்டுபண்ணுபவர்களை கைதுசெய்யவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

## கிரிக்கெட் இரசிகர்களின் அதீத எதிர்பார்ப்புக்குள்ளான ஆஷஸ் தொடர்

# பிரிஸ்பேன் கபாவில் இன்று ஜோரான ஆரம்பம்

கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த ஆஷஸ் டெஸ்ட் தொடர் இன்று பிரிஸ்பேனில் ஆரம்பமாகும் டெஸ்டுடன் களைகட்டுகிறது.

இதல் இழந்த கிண்ணத்தை மீட்க அவுஸ திரேலியாவும் தக்கவைக்க இங்கிலாந்தும் போராட உள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இந்நிலையில் இத்தொடரின் முதல் போட்டி பிரிஸ்பேன் கபாவில் இன்று ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய அணியை பொறுத்த வரை கடந்த முறை (2015)' ஆஷஸ் கிண்ணத்தை இழந்தது. இதற்கு, சொந்த மண்ணில் பதிலடி தர வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஆண்டு 7 டெஸ்டில் 3 வெற்றி, 3 தோல்வி, ஒரு சமனிலை பெறுபேற்றை பெற்றுள்ளது.

**அச்சுறுத்தும் வோர்னர்**

தொடக்க வீரர் வோர்னர் வலுவான அடித்தளம் அமைக்க வேண்டும். கழுத்து வலி காயத்திலிருந்து மீண்டுள்ள இவர், பிரிஸ்பேன் மைதானத்தில் 6 டெஸ்டில் 550 ஓட்டங்கள் (3 சதம்) எடுத்து அச்சுறுத்துகிறார். இவருடன் உள்ளூர் போட்டியில் அசத்திய பான்கிராப்ட் நம்பிக்கை அளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

**பலம் சேர்க்கும் ஸ்மித்**

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் முதல் முறையாக அணித் தலைவராக களமிறங்கும் பெருமையுடன் ஸ்மித் உள்ளார்.

கடந்த 2015இல் இங்கிலாந்து மண்ணில் நடந்த தொடரில் அதிக ஓட்டங்கள் (5 போட்டி, 508) குவித்து அசத்தினார். இவரை சொந்த மண்ணில் அசைத்துப்பார்ப்பது சற்று கடினம்தான். 'நடுத்தர வரிசையில்' கவாஜா, ஹேண்ட்ஸ்கோம்ப் வலுப்படுத்த வேண்டிய அவசியத்தில் உள்ளனர். 'சீனியர்' வீரர் ஷோன் மார்ஷ் 6ஆவது இடத்தில் இறக்கப்படலாம். மத்யூ வேட், பீற்றர் நெவிலை புறக்கணித்து 7 ஆண்டுக்குப்பின் பெய்னை 'விக்கெட் காப்பாளர்' பணிக்கு தேர்வு செய்துள்ளனர். ஸ்மித்துடன் இணைந்து ஒரே டெஸ்டில் (லோர்ட்ஸ், 2010) அறிமுகமான இவர் கவனம் ஈர்க்க வேண்டும்.

**'ஸ்ரார்' ஸ்ரார்க்**

வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரார்க் மீது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சமீபத்தில், உள்ளூர தொடரான 'ஷெபீல்ட் ஷீல்டில்' ஒரே போட்டியில இரண்டு முறை 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்திய இவரின் 'யோர்க்கர்' எதிரணியை சிதறடிக்கலாம். ஹேசல்வுட், கம்மின்ஸ் கூட்டணி அமைத்தால் உள்ளூர் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த முடியும். பிரிஸ்பேன் மைதானத்தில் 6 டெஸ்டில் 26 விக்கெட் வீழ்த்தி உள்ள லியோன் மீண்டும் பந்தை சுழற்ற தயார்.

**உற்சாகத்தில் ரூட்**

இங்கிலாந்து அணிக்கு 'சீனியர்' வீரர் அலெஸ்டர் குக் 'தூண்' போல நிற்கிறார். 147 டெஸ்டில் 11629 ஓட்டங்கள் எடுத்துள்ள இவர், 4ஆவது ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறார். மறுபுறம், ஆஷஸ் தொடரில் முதல் முறையாக அணியை வழிநடத்தும் உற்சாகத்தில் ஜோ ரூட் உள்ளார். இவர்களை தவிர்த்தால் துடுப்பாட்ட வரிசை பலமாக இல்லை.

**ஸ்ரோக்ஸ் இல்லை**

சமீபத்தில், போதையில் மற்றொரு நபருடன் மோதலில் ஈடுபட்ட 'சகலதுறை வீரர்' ஸ்டோக்ஸ் சிக்கலில் தவிக்கிறார். இதனால், முக்கியமான ஆஷஸ் தொடரில் கடைசி கட்டத்தில் ஓரங்கட்டப்பட்டார். தற்போது வரை பிரச்சினை முடியாததால், அணிக்கு பெரும் இழப்பாக அமைந்துவிட்டது.

**அண்டர்சன் அசத்துவாரா?**

இங்கிலாந்து அணிக்கும் 'வேகம்தான்' ஆணிவேராக காணப்படுகிறது. அண்டர்சன் இம்மைதானத்தில் 3 டெஸ்டில் 5 விக்கெட் தான் வீழ்த்தி உள்ளார். இவரின் 'சுவிங்' பந்து வீச்சும் கைகொடுக்கும். கடந்த தொடரில் பிரோட் (5 போட்டி, 21 விக்.,) சொந்த மண்ணில் மிரட்டினார். இரு அணியிலும் வேகப் பந்துவீச்சுதான் வெற்றியை தீர்மானிக்கும்.

**இது வரலாறு**

ஆஷஸ் தொடரின் வரலாறு மிகவும் சுவாரஷ்யமானது. 1882ல் லண்டன் ஓவல் டெஸ்டில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, இங்கிலாந்து மண்ணில் முதல் வெற்றியை பதிவு செய்தது. இதுகுறித்து 'லண்டன் ஸ்போர்ட்டிங் டைம்ஸ்' பத்திரிகை கேலியாக வெளியிட்ட செய்தியில்,"1882, ஒக., 29ல் இங்கிலாந்து அணி மரணம் அடைந்து விட்டது. இதன் உடல் எரிக்கப்பட்டு, சாம்பல் (ஆஷஸ்) அவுஸ்திரேலியா எடுத்துச் செல்லப்படுகிறது," என, அஞ்சலி செய்தி போல குறிப்பிட்டது.

பின், 1882-83ல் அவுஸ்திரேலியா சென்ற இங்கிலாந்து அணி தொடரை 2-1 என வென்று பதிலடி கொடுத்தது. இத் தொடரின் 3ஆவது டெஸ்டில் பயன்படுத்திய 'பெயில்ஸ்களை", சில பெண்கள் எரித்து, அதன் சாம்பலை (ஆஷஸ்) 6 அங்குல நீளமுள்ள மண்ணால் ஆன, கலசத்தில் போட்டு இங்கிலாந்து அணித் தலைவர் பிளிக்கிடம் வழங்கினர். அன்று முதல் இரு அணிகள் மோதும் டெஸ்ட் தொடருக்கு 'ஆஷஸ்" என பெயர் வந்தது.

பழமையான ஆஷஸ் கிண்ணம், லண்டனில் உள்ள மெரில்போர்ன் கிரிக்கெட் கழக அருங்காட்சியகத்தில் உள்ளது. இதன் மாதிரியை தான் வீரர்கள் கையில் காணலாம். 1998-99ல் இருந்து வெற்றி பெறும் அணிக்கு 'கிறிஸ்டலில்" செய்யப்பட்ட ஆஷஸ் கலச மாதிரி கிண்ணம் வழங்கப்படுகிறது.

**28 ஆண்டு ஆதிக்கம**

கடந்த 1988 நவம்பரில் பிரிஸ்பேன் மைதானத்தில் நடந்த டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளிடம் வீழ்ந்தது. இதன்பின், இங்கு நடந்த 28 டெஸ்டில் 21 வெற்றி, 7 'சமனிலை' பெற்றுள்ளது. 29 ஆண்டாக இம்மைதானத்தில் தோல்வியே சந்திக்காமல் ஆதிக்கம் செலுத்துகிறது.

இங்கிலாந்து அணியை பொறுத்தவரை 1986 நவம்பரில் இங்கு அவுஸ்திரேலியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன்பின், இம்மைதானத்தில் 7 டெஸ்டில் 5 தோல்வி, 2 'சமனிலை' அடைந்தது. 31 ஆண்டாக வெற்றிக்காக காத்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக இங்கு இரு அணிகளும் 19 போட்டிகளில் மோதி உள்ளன. இதில் அவுஸ்திரேலியா 11, இங்கிலாந்து 3 வெற்றியை வசப்படுத்தி உள்ளன. 5 போட்டி சமனிலையானது.

**மழை வருமா?**

போட்டி நடைபெறும் பிரிஸ்பேன் பகுதியின் இன்றைய வெப்பநிலையை பொறுத்த வரை அதிகபட்சம் 26, குறைந்தபட்சம் 15 டிகிரி செல்சியாக இருக்கும். மழை வர 20 சதவீதம் வாய்ப்புள்ளது. கடைசி இரண்டு நாட்கள் முறையே 40, 50 சதவீதம் மழை வர வாய்ப்புள்ளதால் ஆட்டம் பாதிக்கப்படலாம்.

**இதுவரை...**

ஆஷஸ் டெஸ்ட் தொடர் இதுவரை 69 முறை நடந்துள்ளது. இதில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் தலா 32 முறை கைப்பற்றி உள்ளன. 5 முறை சமனானது.

ஆஷஸ் தொடரில் இரு அணிகளும் 325 போட்டியில் மோதி உள்ளன. இதில் அவுஸ்திரேலியா 130, இங்கிலாந்து 106 வெற்றியை வசப்படுத்தி உள்ளன. 89 போட்டி சமனிலையில் முடிந்தது.

ஒட்டுமொத்த டெஸ்ட் அரங்கில் இரு அணிகளும் 341 போட்டிகளில் சந்தித்து உள்ளன. அவுஸ்திரேலியா 140 போட்டியில் வாகை சூடியுள்ளது. இங்கிலாந்துக்கு 108 வெற்றி கிடைத்துள்ளது. 93 போட்டி சமனிலையானது.

**ஆடுகளம் எப்படி**

பிரிஸ்பேன் மைதானத்தின் ஆடுகளத்தை பொறுத்தவரை 'வேகத்திற்கு' சாதகமானது. இதனால், ஸ்ரார்க், அண்டர்சன் உள்ளிட்டோர் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.



# தனிமையிலிருந்த மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டார்

ஒரு வார காலமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் நேற்றைய தினம் அவரது வீட்டில் உள்ள நாற்காலியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் பகுதியை சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயலட்சுமி (வயது-73) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார். கடந்த ஒரு வாரமாக காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்திபேதியால் பாதிக்கப்பட்டிருந்தார். தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த மூதாட்டிக்கு பத்திரிகையும் உணவும் கொடுப்பதற்கு ஒரு நபர் அவரது வீட்டுக்கு செல்வது வழமை. அவ்வாறு நேற்றுக் காலை 7 மணிக்கு குறித்த நபர் அங்கு சென்று மூதாட்டியை அழைத்துள்ளார். பதில் வராத காரணத்தால் வீட்டின் யன்னலால் எட்டிப் பார்த்துள்ளார். அப்போது குறித்த மூதாட்டி கதிரையில் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சடலம் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 25.10.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்

## கந்தர் தம்பிராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய் (1450) இங்ஙனம் குடும்பத்தினர்

# 27 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
06
10
1927



இறப்பு
25
11
1990

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரி யுமாகிய ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

(1431)

276, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
சமூக அபிவிருத்தி மன்றம்.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஈ.பி.டி.பி. தனித்து எதிர்கொள்ளும்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தனித்து போட்டியிடுவதற்கு தயாராகி வருகின்ற நிலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளுக்கு அமைவாக பல இடங்களில் தனித்தும் சில இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருடன் நட்புறவைப் பேணும் முகமாக இணைந்தும் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பிராந்திய கூட்டு தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை ஈ.பி.டி.பி. முன்னெடுத்து வருகின்றது என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் கட்சிகளுடனான சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஈ.பி.டி.பியின் சார்பில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி மன்றங் களுக்கான தேர்தல் தொடர்பாகவும் நாட்டின் சமகால அரசியல் சூழ்நிலை தொடர்பான பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை ஈ.பி.டி.பி செய்திருப்பதாகவும் நட்புறவைப் பேணும் முகமாக சில இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தில் இணைந்தும் பல இடங்களில் ஈ.பி.டி.பி. தனது வீணைச் சின்னத்தில் தனியாகவும் போட்டியிடுவதற்கு முடியும் என்று தெரிவித்தார்.

இதேவேளை ஈ.பி.டி.பி. தனித்து வீணைச் சின்னத்தில் போட்டியிடும் இடங்களில் கருத்து ஒருமைப்பாடுடைய முற்போக்குச் சக்தி களுடனும் சிறு கட்சி களுடனும் பொது மற்றும் சமூக அமைப்புக் களுடனும் இணைந்து பிராந்தியக் கூட்டமைத்து போட்டியிடுவதற்கும் ஈ.பி.டி.பி. தயாராக இருக்கின்றது என்றும் அது தொடர்பான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.செ.வேதநாயகன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் திரு.

### மைக்கல் செபஸ்ரியாம்பிள்ளை



அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(சி-465)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் திரு.வ.இங்கரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் திரு. கார்த்திகேசு வல்லிபுரம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 1937.07.13 மறைவு 2017.11.04 (சி-465)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு. த.மோகனதாஸ் அவர்களின் அன்பு மாமனார்

அமரர் திரு.

### பொன்னையா சதாசிவம்



அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். (சி-465)

## பெயர் மாற்றம்

நாச்சிமார் கோவிலடி திக்கம் அல்வாய் வட மேற்கைச் சேர்ந்த ஜயசேனா தில்ருக்ஷி நிரோஷா ஆகிய நான் எனது பெயரை ஜயசேனா நிரோஷா என மாற்றம் செய்து இன்றுமுதல்என்சார்ந்தசகலஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
ஜயசேனா நிரோஷா (1440)

## இராசி பலன்

23.11.2017
கார்த்திகை 07, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 02.59 மணிவரை
உத்தராடம் முழுவதும்
சுபநேரம் 7.41-9.11 மணிவரை
இராகுகாலம் 01.41-03.11 மணிவரை
சத்திய சாயி பாபா ஜனன தினம்
திருவண்ணாமலை கொடி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>மதியம் 12.26 மணிக்கு<br>மகர-சந் | | ராகு |
| கேது | | | |
| சந் | சனி, புத<br>சூரி | குரு, சுக் | செவ் |

**மீனம்**
அரசு தொடர்பான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கனவு பலிதமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்**
கலங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்**
காலைப் பொழுது நடைபெறவிருந்த சுபகாரியமொன்று மாலைப் பொழுது தாமதமாகலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**கும்பம்**
சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்**
வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**மகரம்**
வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், நீண்டநேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்**
தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கற்பனை மிகுதியான நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்**
வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வாகன சுகமுண்டு.

**கன்னி**
நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

## 'சம்பந்தன் சிங்கக்கொடியை ஏந்தியதற்கு மன்னிப்புக் கேட்டார் மாவை'

# தமிழரசுக் கட்சி-சிங்கள அரசிடம் சர்வேஸ்வரன் கேள்விக்கணை

## 'தந்தை செல்வாவின் வழியிலேயே தேசியக் கொடியை ஏற்ற மறுத்தேன்'

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுதந்திரம் அடைந்த ,நாளில் இருந்து சிங்கக் கொடியை தமிழ் மக்கள் தமது தேசியக்கொடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. அது மூவின மக்களின் கௌரவத்தையும் பிரதிபலிப்பதாக அல்லாது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றதாக இருக்கிறது. இந்த நிலையில் சகல மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே தேசியக்கொடி மாற்றப்பட வேண்டும் என்ற வகையில் தான் எங்களுடைய தமிழ் மக்களுடைய எண்ணங்களை. நாங்கள் பிரதிபலிக்கின்றோம்என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனின் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடை நிதியின் ஒரு பகுதியிலிருந்து கடந்த 20 ஆம் திகதி பயனாளிகளுக்கு உதவித்திட்டங்களை வழங்கி வைத்து அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையின் தேசியக் கொடியாக வடிவமைக்கப்பட்ட வாளேந்திய சிங்கம் பதிக்கப்பட்ட சிங்கக்கொடி 1950இல் தந்தை செல்வாவால் இது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்ற கொடியாக இருப்பதால், அதனை நாங்கள் தேசியக்கொடியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியிருந்தார். அந்தவகையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை தேசியக்கொடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. அது மட்டுமன்றி எங்களுடைய இனப்பிரச்சினை தொடர்பான ஒவ்வொரு பேச்சு வார்த்தைகளின் போதும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேசுகின்ற போது தேசியக் கொடியை மாற்றுகின்ற விடயம் குறித்து பேசப்பட்டுள்ளன. தேசியக் கொடி என்பது ஒரு பிரச்சினையாகவே இன்றுவரை இருந்து கொண்டிருக்கின்றது.



ஆகவே இந்த 60 ஆண்டுகால வரலாற்றில் எமக்குத் தெரிந்த மிகப் பெரும்பாலான அரசியல் கட்சிகளாக இருந்தாலென்ன, விடுதலைப் போராட்ட இயக்கங்களாக இருந்தாலென்ன, அதற்குப் பின்னர் வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலென்ன ஒருசிலரைத்தவிர பெரும்பாலானோர் தந்தை செல்வாவின் கொள்கையைப் பிரதிபலிக்கும் வகையில் தேசியக் கொடியை ஏற்றுவதில்லை என்ற உறுதியான கொள்கையுடனேயே செயற்பட்டு வருகின்றனர். அதனால், அதற்கான எதிர்ப்பையும் காட்டிக் கொண்டிருக்கிறோம்.



கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவருக்கருகில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சம்பந்தன் தேசியக்கொடியை கையிலே வைத்திருந்த படங்கள் பத்திரிகையிலே வெளி வந்தன. அதனைப்பார்த்த பின்னர் பத்திரிகைகளில் பல்வேறு கண்டனங்களும், மிகக்கடுமையான விமர்சனங்களும் வந்தன. அதேவேளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத தேசியக்கொடியை சம்பந்தர் கையில் வைத்து ஆட்டியதைப் பார்த்து மிகப்பெரிய விமர்சனங்கள் வந்தன. அந்த விமர்சனங்களுக்குப் பதிலாக அடுத்த நாளே சம்பந்தருடைய சார்பிலே தான் பகிரங்க மன்னிப்பு கோருகிறேன் என்று இப்போது தமிழரசுக்கட்சியின் தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராசா அறிக்கைவிட்டார். ஆகவே அன்று சம்பந்தர் கொடி ஏந்தியது தவறு என்று அறிக்கை விட்டு மன்னிப்பு கோரிய போது அதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாத சிங்கள இனவாதம் இன்றைக்கு அதனைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கின்றது.


மகிந்த ராஜபக்ஷ இருக்கின்ற போது சிங்கக்கொடியை ஆட்டியது தவறு என்று கூறிய தமிழரசுக்கட்சி இன்று மைத்திரி ஆட்சியில் அந்தக்கொடி ஏற்ற மறுத்தமை தொடர்பில் மௌனம் சாதிப்பது வேடிக்கையாக இருக்கிறது. இந்த விடயத்தை தூக்கிப்பிடிப்பதன் ஊடாக இந்தப் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதால், அரசாங்கம் மீண்டும் தேசியக்கொடி தொடர்பில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற சிங்களத் தலைவர்கள் சிலர் இது அரசியல் யாப்பை மீறுகின்ற செயல் என்று பேசுகின்றனர். அரசியல் யாப்பின் மீது நாங்கள் சத்தியப் பிரமாணம் செய்திருக்கின்றோம். அவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்து விட்டு நாங்கள் அதை மீறுவதாக கூறியிருக்கின்றனர். இது தவறான விடயம். ஏனெனில் இந்த அரசியல் யாப்பின் மீது சத்தியம் செய்து விட்டுத்தான் நாட்டின் ஜனாதிபதியும் வருகிறார். இந்த அரசியல் யாப்பை நான் போற்றிப் பாதுகாப்பேன். அவற்றை நடைமுறைப்படுத்துவேன் என்று தான் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைவருமே சத்தியப்பிரமாணம் செய்து விட்டு வருகின்றனர்.

இந்த அரசியல் யாப்பிலே 13 ஆவது திருத்தத்தில் இருக்கக்கூடிய வடக்கு- கிழக்கு இணைந்த மாகாணங்களுக்கான பொலிஸ்,காணி அதிகாரங்களை வழங்க மாட்டேன் என்று ஏற்கனவே இருந்த ஜனாதிபதிகளும் இப்போது இருக்கின்ற ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் பகிரங்கமாகவே திரும்பத்திரும்ப கூறி வருகின்றனர்.

ஆகவே அரசியல் யாப்பிலே கொடுத்திருக்கக்கூடிய பொலிஸ், காணி அதிகாரங்களை நான் நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று சொல்வது அரசியல் யாப்பை மீறுகின்ற ஒரு செயலாக இவர்களுக்குத் தெரியவில்லையா? ஆகவே இவ்வாறு அவர்கள் பகிரங்கமாகவே அரசியல் யாப்பை மீறுகின்ற போதெல்லாம் வாய் திறக்காதவர்கள் இன்று சிங்கச் சின்னம் பொறித்த கொடி ஏற்றவில்லை என்பதற்கு மட்டும் வாய் திறப்பதென்பது இன்று இருக்கக்கூடிய முக்கியமான அரசியல் விடயங்களில்இருந்து மக்களை திசைதிருப்பும் உள்நோக்கம் கொண்ட ஒரு செயலாகவே நான் பார்க்கிறேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் மகிந்த சமரசிங்க உரையாற்றுகையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்றாமல் புறக்கணித்திருக்கிறார். ஆகவே நாங்கள் எப்படி அவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்று கேட்டிருக்கிறார். அவர் அப்படி கேள்வி கேட்கின்ற போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருக்கின்ற 15 பாராளுமன்ற உறுப்பினர்களில் யாரேனும் அதற்குப்பதில் சொல்லவில்லை. அதனுடைய அர்த்தம் என்ன? அவர்கள் அனைவரும் இந்தத் தேசியக் கொடியை ஏற்றுக்கொண்டு விட்டார்களா? அல்லது தமிழரசுக் கட்சி தந்தை செல்வா என்று சொல்லிக்கொண்டு செல்வாவின் கொள்கைகளை குழிதோண்டிப்புதைத்து விட்டார்களா? இன்றைய ஊடகங்களிலே இந்த விடயம் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வரும் நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி வாய் மூடி மௌனிகளாக இருப்பது இந்த விமர்சனங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? என்ற கேள்விக்கான பதில்களை எங்கள் அரசியல்வாதிகளிடமிருந்து பெறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய முன்பள்ளி கட்டடத்திற்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர காம ஆலய முன்பள்ளிக்கான, கட்டட புனரமைப்புக்காக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் 75 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளார்.

தனது 2017ஆம் ஆண்டுக்கான மாகாணசபைக்கான நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்படி ஆலய முன்பள்ளியின் புனரமைப்புக்கான காசோலை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி செல்லக்கதிர்காம கோயிலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினருடன், ஆலய பிரதமகுரு மற்றும் ஆலய நிர்வாகிகள், ஊரவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

## சாராயம், கள் வைத்திருந்த இருவர் நாகர்கோவிலில் கைது

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் அரசசாராயம் மற்றும் கள் என்பவற்றை விற்பனை செய்த இருவரைக் கைது செய்ததுடன் பொருட்களும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு நாகர் கோவில் கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சாராயம் மற்றும் கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் 180 மில்லி லீற்றர் அளவு கொண்ட 17 சாராயப் போத்தல்களையும் 19 போத்தல் கள்ளினையும் மீட்டதுடன் இருவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## இராஜேஸ்வரி பாடசாலைக்கு நிழற்பிரதி இயந்திரம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சுவிஸ் ஒன்றியத் தலைவர் சொக்கலிங்கம் ரஞ்சனின் கோரிக்கைக்கு அமைவாக புங்குடுதீவு இராஜேஸ்வரி தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் என். கனகரட்ணம் விந்தன் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான நிழற் பிரதி இயந்திரத்தினை அண்மையில் பாடசாலையில் வைத்து ஆசிரியர்களிடம் கையளித்தார். (இ-7)

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை.

வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2016/2017 (வெளிவாரி)
Bachelor of Business Management Degree Programme-2016/2017 (External)

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை-2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்று வருடகால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 07.12.2017 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை www.codl.jfn.ac.lk அல்லது lms.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரிகளிலும், 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடனும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
20.11.2017

(சி-471)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
கலைப்பீடம், கல்வியியற்றுறை

## ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித்தகைமை (டிப்ளோமா) கற்கைநெறி-2017/2019

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித் தகைமை (டிப்ளோமா) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அரசாங்கப் பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றுதல் வேண்டும். அல்லது கல்வித் திணைக்களத்தில் கல்வி நிர்வாக அதிகாரிகளாக கடமையாற்றுதல் வேண்டும். அல்லது அரசாங்கப் பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் 2018.01.31 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளரிடம் ரூபா 100 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பிரதிப்பதிவாளர், கலைப்பீடம் அவர்களிடமிருந்து இக் கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும். அல்லது www.atrs.jfn.ac.lk என்ற வெப்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து இக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணத்தை மக்கள் வங்கி, பல்கலைக்கழக கிளையில் உள்ள 162-1-001-6-0000880 என்ற கணக்கில் "நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் ஏதாவது ஒரு மக்கள் வங்கி கிளையில் வைப்புச்செய்து அப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பற்றுச் சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

இக் கற்கைநெறிக்கான கட்டண விபரங்கள்:

பதிவுக் கட்டணம் :750.00
கற்கைநெறிக் கட்டணம்: 10000.00
நூலக வைப்புக் கட்டணம்: 500.00 (மீளப் பெறத தக்கது)
நூலக கட்டணம்: 750
மொத்தம்: 12000.00

பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக மாணவர் தெரிவுகள் இடம்பெறும்.

1. எழுத்துத் தேர்வில் ஆகக் குறைந்தது 45 புள்ளிகள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை எனும் பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும். அத்துடன்

2. கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தை இக் கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது தவறாது சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித்தகைமை (டிப்ளோமா) கற்கைநெறி-2017/2019 எனக் குறிப்பிட்டு 2018.01.31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பிரதிப்பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

(சி-470)

# தாதியர்கள் பணிப் புறக்கணிப்பு வெறிச்சோடியது வைத்தியசாலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நேற்றுப் புதன் கிழமை காலை 7 மணி தொடக்கம் 24 மணிநேர பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் யாழ். போதனா வைத்தியசாலை வெறிச்சோடிக் காணப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் அரச தாதியர்கள், துணை மருத்துவ சேவையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததாக வடமாகாண அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் க.ஜனார்த்தனன் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு, பதவியுயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை, கைவிரல் அடையாள வருகை பதிவேட்டை நடைமுறைப் படுத்த மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

நோயாளர்கள், பொதுமக்களின் நன்மை கருதி வேலை நிறுத்தத்தின் போது உயிர் காப்பு நடவடிக்கைகளுக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக அரச வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-4)

# அரச பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதி எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை



(கொழும்பு)

அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2020ஆம் ஆண்டில் 50,000 வரை பல்கலைக்கழக அனுமதியை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் க்ரேரு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாத அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடம் பல்கலைக்கழக அனுமதி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இது அனைத்து இளைஞர், யுவதிகளுக்கும் பாரிய வெற்றி எனவும் அரச பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## அன்ரன் விமல்ராஜ் ஜீன் அஸ்வினி



யா/தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி செல்வி. அன்ரன் விமல்ராஜ் ஜீன் அஸ்வினி அவர்கள் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரை எமது பாடசாலை சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இவருக்குக் கல்வி கற்பித்த ஆசிரியை திருமதி சுரேந்தினி வேல்நம்பி அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு சித்திப் புள்ளிக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அ.மலரவன்-140, தே.யூடிசன்-121, ம.றெக்ஸ்சன்-118

CONGRATULATIONS

(1442)

வாழ்த்துவோர்,
அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்.
யா/தாளையடி றோ.க.த.க. பாடசாலை, தாளையடி.


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:18<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/7982 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி<br>கி.பா: 37 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6122 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா:52<br>செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/லண்டன் PR<br>தொ.இ: B/7995 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 45 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6127 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 59செவ். 8 இல்<br>தகைமை/தொழில்:A/L/பெல்ஜியம் PR<br>தொ.இ: B/7996 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 20 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: BBA/ அரசதொழில்<br>தொ.இ: G/6128 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7997 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 95 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6130 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 100 மில்லியன் ரூபா செலவில் 42 வேலைகள் முன்னெடுப்பு

## முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தகவல்படி

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயச் செய்கைகளை விருத்தி செய்யும் நோக்கில் இவ்வாண்டு மீள்குடியேற்ற அமைச்சினுடைய 100 மில்லியன் ரூபா செலவில் 42 வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் கைவிடப்பட்ட மற்றும் சேதமடைந்த சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக்குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைககள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு மீள்குடியேற்ற அமைச்சின் 100 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் 42 வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச்செயலகத்தின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் 25 மில்லியன் ரூபா செலவில் 9 வேலைத்திட்டங்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 15 மில்லியன் ரூபா செலவில் 7 வேலைத்திட்டங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 30 மில்லியன் ரூபா செலவில் 14 வேலைத்திட்டங்களும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 10 மில்லியன் ரூபா செலவில் 4 வேலைத்திட்டங்களும்மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 15 மில்லியன் ரூபா செலவில் 6 வேலைத்திட்டங்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 5மில்லியன் ரூபா செலவில் 2 வேலைத் திட்டங்களுமாக 42 வேலைத் திட்டங்கள் 100 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இதுவரை ஒரு வேலை பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இது வரை 24.13 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான்

## மாவீரர் துயிலுமில்லங்களின் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள இரண்டு மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் தினத்தை நினைவு கூருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களின் துப்புரவு பணிகள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.


எனவே குறித்த இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களுக்குரிய மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களை எதிர்வரும் 27ஆம் திகதி மாலை உரிய நேரத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த மாவீரர் துயிலும் இல்லங்களில் சகல பணிகளும் பூர்த்தியடைந்துள்ளமையால் அநாவசியமற்ற குழப்பங்களை எவரும் ஏற்படுத்த வேண்டாம் என்பதையும் தெரிவித்து கொள்கின்றோம் என மன்னார் மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (2-4)




# மன்னார் நகரப் பிரதேச கலாசாரவிழா





(மன்னார்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், மன்னார் பிரதேசச் செயலகமும், மன்னார் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய மன்னார் நகரப் பிரதேச கலாசார விழா அண்மையில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் எம்.பரமதாசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல்,முசலி பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பா.அபிராமி, மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுதந்தி செபஸ்தியன், மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சிறப்பு கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, மன்னல் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெற்றதோடு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு பொலிஸார் தீவிர சோதனை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸார் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப்பயணித்த சகல வாகனங்களையும் பனிக்கன்குளம் பகுதியில் வழிமறித்து தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளனர்.

வவுனியா மற்றும் கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் அண்மைய நாட்களாக போதைப்பொருட்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான போதைப்பொருள் கடத்தல்களை தடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா மற்றும் கொழும்பு நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்த பயணிகள் பேருந்துகள் உள்ளிட்ட சகல வாகனங்களும் நேற்று முன்தினம் 21ஆம் திகதி இரவு 8 மணி முதல் மாங்குளம் பனிக்கன் குளம் பகுதியில் வழிமறிக்கப்பட்டு மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சோதனை நடவடிக்கைகளுடன் ஈடுபட்டுள்ளதுடன், சந்தேகத்திற்கிடமான பயணப் பொதிகளையும் வாகனங்களையும் சிற்றூர்திகளையும் தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தியிருந்தனர். (2-315)

# முல்லையில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக இவ்வாண்டு ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் ஊடாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக இவ்வாண்டு ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதாவது கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 485 குடும்பங்களுக்கும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 210 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 115 குடும் பங்களுக்கும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவில் 110 குடும்பங்களுக்கும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 160 குடும்பங்களுக்குமாக இந்த வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 2016 ஆம் ஆண்டில் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மேற்படி தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. (2-315)

# கலந்துரையாடல் செயலமர்வு

(பூநகரி)

சமுர்த்திஅபிவிருத்திதிணைக்கள ஊடகவியலாளர்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய ஊடகவியலாளர்களுக்குமான கலந்துரையாடல் செயலமர்வு இன்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பழைய செயலக வளாக கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த செயலமர்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களையும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குமாறு சமுர்த்தி அபிவிருத்து திணைக்களப் பணிப்பளார் திருமதி ஆதவாலன் அறிவித்துள்ளார். (2-84)

# பரம்பரையாக வாழ்ந்து வந்த பூர்வீக நிலம் கேட்டுத்தான் போராடுகின்றோம்

(கண்டாவளை)

எமது சொந்த நிலத்திற்காக கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக போராடி வருகின்ற போதும், அதற்கான தீர்வும் கிடைக்கவில்லை. அரசியல் வாதிகளும் எங்களுக்கு எந்த உதவிகளையும் செய்யவில்லையென தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபபிலவில் தலைமுறைதலைமுறைகளாக வாழ்ந்த தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக்கோரி கடந்த ஒன்பது மாதங்களாக தொடர் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம் மக்கள் நாங்கள், யாருக்கெதிராகவும் போராடவில்லை. எங்களது சொந்த நிலத்தைக் கேட்டுத்தான் போராடுகின்றோம்.

கேப்பாப்பிலவு எங்களது மூதாதையர்கள் வாழ்ந்து எங்களுக்கு தந்த முதுசக் காணிகள். இந்தக்காணிகளை இராணுவம் விடுவிக்காது வைத்துக் கொண்டு எங்களை மாதிரிக் கிராமத்தில் குடியேற்றியிருக்கின்றார்கள். நான்கு ஆண்டுகளாக இங்கு வாழ முடியாது பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். அதாவது, வாழ்வாதாரம் இன்றியும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து இயலாதகட்டத்தில் இப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

ஒன்பது மாதங்களாக எந்தத்தொழில் வாய்ப்புக்கள் இன்றி தொடர்ந்து போராடி வருகின்றபோது எங்களது போராட்டத்தை வைத்து எத்தனையோ பேர் அரசியல் செய்கின்றார்கள். ஆனால், எங்களுக்கு உதவிகள் செய்யவில்லை.

எங்களது மாவட்டத்தில் எத்தனையோ மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஐயாயிரம் ரூபாவும் ஒரு மாகாண சபை உறுப்பினர் பத்தாயிரம ரூபா மட்டுமே போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எங்களுக்காக வழங்கியிருக்கின்றார்களே தவிர, ஏனைய எவரும் எந்தவிதமான உதவிகளையும் செய்யவில்லையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-315)

# தாதியர் உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு









(குருமன்காடு)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்குகின்ற வைத்தியசாலைகளில் பணிபுரிகின்ற தாதியர் உத்தியோகத்தர்கள் உட்பட பலதுறைகளைச் சேர்ந்த சுகாதாரப் பிரிவினர் நேற்று காலை 7 மணி தொடக்கம் 24 மணி நேர பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடு, பதவியுயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை, கைவிரல் அடையாள வருகை பதிவேட்டைநடை முறைப்படுத்த மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பணி புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு ஆதரவாக வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் தாதியர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்ரே கதிரியக்க உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதார பிரிவினர் உட்பட்ட சுகாதார சேவையினர் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலை வந்துள்ள நோயாளர்கள் வைத்தியர்களால் பரிசோதிக்கப்பட்டபோதிலும் மருந்தாளர்களும் குறித்த பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் மருந்துகளை பெற்றுக் கொள்ளாமல் வீடு திரும்பியிருந்தனர். குறிப்பாக சிறுநீரக நோயாளர்கள் மற்றும் சத்திரசிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு கூட மருந்துகள் வழங்கப்படாத நிலை காணப்பட்டது. இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் அரச தாதியர்கள், துணை மருத்துவ சேவையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக துணை வைத்திய சேவையாளர்கள் தெரிவித்திருந்தனர்.

எனினும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் அத்தியாவசிய சேவைகளில் தாதியர்கள் ஈடுபட்டுள்ள போதிலும் நோயாளர்கள் விடுதிகளில் தாதியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் உள்ளிட்ட மருத்துவ சேவையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை உட்பட மாவட்டத்தில் உள்ள சில வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமையினால் வெளிநோயாளர் பிரிவு முற்றாக இயங்கவில்லை.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்த பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நீண்ட நேரம் காத்திருந்த நிலையில் வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தாதியர்களின் சம்பள பிரச்சினை உள்ளிட்ட தமது பல்வேறு பிரச்சினைகள்தொடர்பில் கலந்துரையா டுவதற்காக சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டால் உடனடியாக பணிப் பகிஷ்கரிப்பை கைவிட தயார் என குறித்த சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-250-281)



# மன்னாகண்டல் குளத்தின் புனரமைப்புப் பணியை உடனடியாக முன்னெடுக்க முடியவில்லை

## கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் உடைப்பெடுத்த மன்னாகண்டல் குளத்தை புனரமைப்பதற்கு மண் பெற்றுக் கொள்வதில் தடைகள் ஏற்பட்டமையால் புனரமைப்பு பணிகளை உடனடியாக முன்னெடுக்க முடியவில்லையென மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி பெய்த தொடர் கன மழையை அடுத்து முல்லைத் தீவு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மன்னாகண்டல் குளம் உடைப் பெடுத்தது.

குறித்த குளத்தை புனரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் மன்னாகண்டல் குளத்தைப் புனரமைப்பதற்கு தேவையான மண்ணை பெற்றுக் கொள்வதில் தடைகள் ஏற்பட்டதாகவும் மண்ணகழ்விற்கான அனுமதியை வழங்க வேண்டிய கனிய வளத் திணைக்களத்தினர் அனுமதியை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நேற்று முன்தினம் அனுமதி கிடைக்க பெற்றும் நேற்றைய தினம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பருவ மழை பெய்ய ஆரம்பித்தமையால் உழவு இயந்திரங்கள் மூலம் குறித்த இடத்திற்கு மண்ணை கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். (2-315)

# முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணி



(பனிக்கன்குளம்)

மாவீரர் நாள் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் நோக்கோடு முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நான்கு மணி தொடக்கம் இரவு எட்டு மணிவரை சிரமதானப்பணி நடைபெற்றது. குறித்த முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில் இந்த துயிலுமில்லத்தின் ஒரு சிறு பகுதி இராணுவ நிலைகள் அற்ற பகுதியாக காணப்படுகிறது. இந்த பகுதியில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு மாவீரர் களின் பெற்றோர்,உறவி னர்கள் இணைந்து துப்புரவு பணிகளை மேற்கொண்ட தோடு முற்றுமுழுதாக இராணுவம் வெளியேறி எம் உறவுகளை நினைவு கூர அனுமதிக்க வேண்டுமெனவும்பெற்றோர், உறவினர்கள் தெரிவித் தனர்.

அதேவேளை இம்முறை இந்த துயிலுமில்லத்தில் உணர்வுபூர்வமாக மாவீரர் நாள் அனுஷ்டிக்க இருப்பதால் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்,உறவினர்களை கலந்து கொண்டு தமது உறவுகளுக்கு சுட ரேற்றி அஞ்சலிகளை செலுத்துமாறும் ஏற்பாட்டு பணிக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (2-281)

# இரு வெவ்வேறு குற்றச் சம்பவங்களுக்கு

## ஒரு இலட்சத்து 11 ஆயிரம் ரூபா 9 பேருக்கு தண்டப்பணமாக விதிப்பு

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் இரு வெவ்வேறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்த 9, சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்றவாளிகளுக்கு ஒரு இலட்சத்து 11, ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடும் எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ. பி. இராஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள திருநகர் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் கசிப்பை உற்பத்தி செய்து வைத்திருந்த 7 சந்தேக நபர்களை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஒப்புக் கொண்டதை அடுத்து ஒரு சந்தேக நபருக்கு தலா 5, ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 30. ஆயிரம் ரூபாவும், இதே வழக்கின் பிரதான சந்தேக நபருக்கு 41 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், ஐயங்கன் குளம் காட்டுப் பகுதியில் அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டு வரும் அரியவகை காட்டு விலங்குகளில் இருந்து உக்கிளான் என்னும் மிருகத்தை இறைச்சிக்காக வேட்டையாடிய 2, சந்தேக நபர்களும் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து ஒருவருக்கு தலா 20, ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 40, ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

# முல்லைத்தீவில் ஆயிரத்து 96 வீடுகள் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது

## மாவட்ட புள்ளிவிபரத் தகவல்படி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு 11 ஆயிரத்து 786 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளதுடன், ஆயிரத்து 96 வீடுகள் திருத்த வேண்டியிருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியிருக்கின்ற மக்களின் அதிகளவான குடும்பங்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான வீடுகளில் வாழ்ந்து வரும் குழந்தைகள், முதியவர்கள் எனப்பலரும் பல்வேறு அசெகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளின்றி வாழ்ந்து வருகின்றன.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச்செயலகப் புள்ளிவிபரத்தின்படி இதுவரை மீள்குடியேறி வாழ்ந்து வரும் 11 ஆயிரத்து 786 பேருக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டியதுடன், யுத்தத்தினால் சேதமடைந்த ஆயிரத்து 96 வீடுகளைப்புனரமைத்துக் கொடுக்கவேண்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம்ஆண்டு வரைக்கும் மீள்குடியேறிய மக்களுக்கு இதுவரை 22ஆயிரத்து 189 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், சேதமடைந்த 4 ஆயிரத்து 382 வீடுகள் திருத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 924 புதிய வீடுகளும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 3ஆயிரத்து 995 புதிய வீடுகளும், ஒட்டுசுட்டான பிரதேச செயலர் பிரிவில் 1802 புதிய வீடுகளும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 81 புதிய வீடுகளும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 603 புதிய வீடுகளும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 381 வீடுகளுமாக 11 ஆயிரத்து 786 வீடுகள் தேவையானதோடு மேற்படி ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் யுத்தத்தினால் சேதமடைந்த ஆயிரத்து 96 வீடுகள் புனரமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் மாவட்டச் செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

## திருப்திகரமாக இயங்கிய

# 14 சனசமூக நிலையங்கள் மானியம் வழங்கத் தெரிவு

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் எல்லைப் பரப்பினுள் கடந்த காலங்களில் 31 சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்தன.

இந்த ஆண்டின் 14 சனசமூக நிலையங்கள் மட்டும் திருப்திகரமாக இயங்கி வருவதால் அத்தகைய நிலையங்களுக்கு வருடாந்த மானியத் ,தொகையாக தலா 10 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 17 சனசமூக நிலையங்களும் திருப்திகரமாக இயங்காத நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டு கடந்த வாரம் பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் மானியம் வழங்கப்படாத நிலையத் தலைவர்கள் , நிர்வாகிகள் ஆகியோர் அழைக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரினால் கலந்துரையாடல் நடைபெற்றது.

தொடர்ந்து இயங்காத சனசமூக நிலையங்களின் விபரங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (2-84)

# கலைத் தரிசனம்

**1950 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி மூளாய்க் கிராமத்தில் பிறந்த இவர் மிருதங்கம், தவில், தபேலா, டோல்கி, டோல், கஞ்சிரா, உடுக்கு, கெண்டை மேல் நாட்டுக் கருவியான பொங்கஸ் என்பனவற்றுடன் முகர்சிங் என்னும் உலோகக் கருவியையும் இசைக்கின்ற விற்பன்னராகவுள்ளார். இவர் சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ்லாந்து, இந்தோனேசியா, சுமாத்திரா தீவு போன்ற பல நாடுகளுக்குச் சென்று இசைப்பணியை ஆற்றியுள்ளார். 1999ஆம் ஆண்டு தமிழர் முழவியல் எனும் நூலினை வெளியிட்டார். இந்நூல் இலங்கை கலாசார அமைச்சின் சாகித்ய மண்டல விருதையும் இலங்கை இலக்கியப் பேரவையின் சாகித்ய மண்டல விருதையும் பெற்றது. உன்னதமான கலைப்பணிகளைச் செய்து வரும் இவர் பல விருதுகளைப் பெற்றார். இவர் 2014ஆம் ஆண்டு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்றார்.யாழ்ப்பாணப் பல்க லைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசைத் துறையால் 34 வருடங்களா கப் பணியாற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.மகேந்திரன் ஐயா அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனந் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.**



## கலாநிதி, லயஞானவாரிதி சி.மகேந்திரன் அவர்களுடனான சந்திப்பு

**❖ தாங்கள் கலைத்துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

நான் சிறுவனாக இருந்த போது வீட்டிற்கு தவில் மேதை தெட்சணாமூர்த்தியின் தமயனும் நாடக, தவில், நாதஸ்வர, மிருதங்க, இசைஞரும் ஆகிய மாசிலாமணி வருவார். என்னைப் பார்த்து இவன் பெரும் கலைஞனாக வருவான் நானே மிருதங்கம் கற்பிக்கிறேன் என்பார். ஆனால் அவர் நடித்துக் கொண்டிருக்கும் போது மேடையிலேயே வீழ்ந்து இறந்து விட்டார். இயற்கையாகவே எனது கைகளில் பாடசாலை மேசை, வாங்கு, கதிரை இவற்றுடன் வேறு கையில் கிடைத்த பொருட்கள் கோப்பை, குடகம், பெட்டி என்பவற்றிலெல்லாம் மிருதங்க, தவில் ஜதிகள், வாசிக்கும் முறைகள் முதலான லய வேலைப்பாடுகள் உதிர்க்கும். இதனால் எனது தந்தையார் மாசிலாமணியின் மாமனும் உலகப் புகழ் தவில் மேதை வலங்கைமான் சண்முகசுந்தரம், மிருதங்க வித்துவான் சந்தான கிருஷ்ணன், நாதஸ்வர மேதை பாலகிருஷ்ணன் ஆகியோரின் தந்தையார் மூளாய் ஆறுமுகம் பிள்ளையவர்களிடத்தில் ஆரம்ப கல்வியைக் கற்கும் போது அவர் குடும்ப சகிதம் கோண்டாவில் சென்றுவிட்டார். பின் இங்குள்ள தவில் மிருதங்க கலைஞர்களிடம் பயின்று கொண்டு இருக்கும்போது ஒரு நிகழ்வில் என்னை பார்த்த சங்கீத பூஷணம் சுழிபுரம் முத்துக்குமாரசாமி சர்மா எனது தந்தையை அழைத்து இவன் பெரிய வித்துவானாய் வருவான். திருநெல்வேலியில் இந்திய கலைஞர் இராமநாதனிடம் கற்க ஒழுங்கு செய்கிறேன் எனக்கூறி அவரே அழைத்துச் சென்று அவரிடம் சேர்த்தார். இவ்வேளையில் பாடசாலை நிகழ்வுகளுககு எனது இயற்கையான ஆற்றலினால் மிருதங்கம் இசைத்து வந்தேன். எனது ஆற்றலை கண்ட ஆசிரியர் சிறிது காலம் போக தமது வீட்டில் தங்கி படிக்கலாமென கூறிய போது அவ்வாறே மூத்த புதல்வன் என்னும் அந்தஸ்துடன் கற்றதோடு அவர் செல்லும் நிகழ்வுகளுக்கெல்லாம் கருவியை கொண்டு சென்று ஒரு சிறந்த மாணவனாக வளர வாய்ப்பாய் இருந்தது. குரு சிஷ்ய முறையில் நன்கு கற்றதோடு இராமநாதன் அகடமியிலும் சேர்ந்து முதலாம் பிரிவில் சித்தியடைந்தேன். அவர் வீட்டில் தங்கி படித்தமையால் அவரைப்போன்று இசைக்கும் திறனைப் பெற்றேன். இதன் காரணமாக என்னை குட்டி இராமநாதன் என்றே அழைப்பார்கள். அவர் விட்டுச் சென்ற பணியை பல்கலைக்கழகம் முதற்கொண்டு சிறப்புடன் பணியாற்றி வருகின்றேன். அவரிடம் கற்று முதுதத்துவமாணி (M.Phil), கலாநிதி (Phd) முதலான அதிஉயர் கல்வியை நிறைவு செய்த மாணவனாகவும் வலம் வருகின்றேன். இவர் சேவை செய்த அகடமியில் நான் சேவை செய்வதற்கு இறைவன் இட்ட கருணையேயாகும்.

**❖ தோல் கருவியின் நுட்பங்கள் பற்றி?**

இதனை வார்த்தைகளாலோ சிறிய விளக்கத்தாலோ கூறி அளவிட முடியாததொன்றாகும். சமயப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டும் இலக்கியம், ஓவியம், கல்வெட்டு, சிற்பம் முதலியனவற்றின் சான்றாதாரங்களுடனும் நடைமுறையில் இருக்கும் தோற்கருவிகள் இசைத்திறன் நுட்பங்களையோ, அமைப்பு முறை நுட்பங்களையோ சாதாரணமாகக் கூறிவிட முடியாது. தமிழ் மக்களால் கையாண்ட தோற்கருவிகள் ஏராளம். எனது தமிழர் முழவியல் நாளில் சுமார் 86 தோற்கருவிகள் பற்றி கூறுகின்றேன். அவற்றின் தொழில் நுட்பம், செய்திறன், அவற்றை இசைக்கும்வேளாவேளை, சமயாசமயம், எந்தெந்த தெய்வத்துக்கு இன்ன வாத்தியம் என பலவாறு ஆராயப்பட்டுள்ளது. பல வாத்தியங்கள் காரணப் பெயருடன் விளங்குகின்றன. ஆவஞ்சி எனும் கருவி பசுவின் மடித்தோலில் செய்யப்பட்டமையால் காரணப் பெயராயிற்று. தண்ணுமை என்பது குளிர்ந்த நிலவை அதன் ஓசைக்கு ஒப்பிட்டு கூறப்பட்டது. இது போலவே மிருதங்கம் ஈறாக காரணப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதன் தொழில் நுட்பம் மிகவும் போற்றக்கூடியது. ஒரு சிறிய அளவிலேனும் அதன் அமைப்பு குறைந்தால் நாத ஓசைகளில் மாற்றம் வரும். சுருதி அளவுகள் பிசகப்பார்க்கும். தெய்வங்களோடு எத்தனையோ கருவிகள் இணைந்திருப்பதை வரலாறுகளில் காணலாம். இதன் காரணமாக மிருதங்கத்தை உருவாக்கியவர் சிவன் என்றே சமயம் கூறுகின்றது. அவர் தோற்றத்திலே கையில் உடுக்கு இருப்பதைக் காணலாம். இதன் காரணமாக அவரை நாதப் பறையினன் என அழைப்பதும் காணலாம். பறை என்பது பறைதல் (பேசுதல்) எனும் கருத்தை வைத்தே உருவாகியது. ஓசை ஒலிகள் இறைவனோடு ஒப்பிடப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் திண்ணுமை (மிருதங்கம்-மத்தளம்) வாத்தியத்தின் சிறப்பு, அதன் இசைக்கும் திறன், நுட்பம், அவ்வாத்தியம் இசைப்பவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பவற்றையெல்லாம் இளங்கோவடிகள் ஆடல் பாடல் தமிழே எனும் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார்.

**❖ வெளிநாட்டில் தங்களின் இசைப்பணி பற்றி?**

நான் முதன்முதலில் 1999 காலப் பகுதியில் இந்தியா சென்று சென்னையில் எனது குருநாதரை சந்தித்து அவரது வீட்டில் தங்கியிருந்த போது தமிழ் மாநில அரசின் கலை, பண்பாட்டுப் பெருவிழா நடைபெற்றது. அதற்குப் பொறுப்பாய் இருந்தவர் இந்தியாவின் முதல் தரமான நடன வல்லுநர் தனஞ்செயன் அவர்கள். எனது தமிழ்நாட்டு வருகையால் என்னை கௌரவிக்கும் முகமாக எனது குருநாதரின் புதல்வன் கலை யரசனின் வயலின் இசை நிகழ்வை ஒழுங்கு செய்து நான் மிருதங்கமும் அவரின் மகன் யோகராஜன் தபேலாவும் இணைந்து வாசித்து தலைமை அமைச்சரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டேன். ஈழத்திலிருந்து வந்தமையாலும் எனது குருநாதரின் மாணவன் என்பதாலும் மிகவும் சிறந்த முறையில் கௌரவிக்கப்பட்டேன். மேலும் அவரது நாதன் இசைக்கல்விக் கூடத்தில் அவரது மாணவர்களுக்கு சிறிது காலம் கற்பிக்கும் வாய்ப்பையும் பெற்றேன்.



1982 காலப்பகுதியில் பெண் சுந்தரலிங்கம் அவர்களுடன் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கும் சென்று இசைப்பணி ஆற்றியுள்ளேன். சிங்கப்பூரின் பல மாநிலங்களுக்குச் சென்று இசைத்தமையால் பல பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றேன். சிங்கப்பூரிலுள்ள இந்தியன் கலை மன்றத்தினரால் Indian Ar tsociety தான லய திலகம் எனும் விருதினையும் பரிசில்களையும் பெற்றேன். சிங்கப்பூர் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பல நிகழ்வுகளில் பங்குபற்றினேன்.

மலேசியாவின் ஈப்போ, சிறம்பாள், பினாங் ,சுங்குரும்பை, மலாக்கா இன்னும் பல மாநிலங்களிலும் வத்துகேவ் முருகன் ஆலயம், கோலாலம்பூர் ஆலயங்கள் பலவற்றுடன் மலேசியா கோலாலம்பூர் இசைக் கலை மன்ற மும்மூர்த்திகள் விழா என்பவற்றில் பங்குபற்றி பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றேன். அங்கும் வானொலி தொலைக்காட்சியிலும் பங்கு பற்றினேன். அங்கும் சில மாணவர்களுக்கு கற்பித்தேன். ஈப்போ மாநிலத்திற்கு சென்றபோது இங்கு நாடகம் (இலங்கேஸ்வரன்) நடத்தவந்த மனோகர் அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள இசை வாத்திய கலைஞர்கள் பல பேருக்கும் மிருதங்கம் இசைத்து பாராட்டுக்களைப் பெற்றேன்.

சிங்கப்பூர்செண்பகவிநாயகர்ஆலயத்தில் எமது இசைநிகழ்வைப் பார்த்த சுமாத்திராதீவில் இருந்து வந்தவர்கள் தங்கள்ஊருக்கும்வந்து இசையை வழங்க வேண்டும் என்று கேட்டதற்கிணங்க அங்கும் சென்று சில ஆலயங்களிலும் திருமண பரிசம் போடும் நிகழ்வுகளிலும் இசை வழங்கினோம்.

மலே சாதியான சீனர் முதலானோர் அநேகமாக வாழும் நாடு. சுமாத்திராவில் மாத்திரம் இந்திய தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்குள்ள ஆலயங்கள் பள்ளிவாசல் போன்று இருக்கும். பூசகர் இல்லை. தீபங்காட்டித் தான் வழிபாடு செய்வார்கள். கவிஞர் கண்ணதாசனை அழைத்திருந்தார்கள். அவர் தங்கிய சுந்தரம் கட்டடக்கலைஞர் வீட்டிலேயே நாங்களும் தங்கினோம்.

2003 காலப்பகுதியில் சுவிஸ்லாந்து சென்று அங்கு நடைபெறும் நாட்டியமயில் போட்டியில் பங்குபற்றி போட்டியாளருக்கு பரிசில்கள் கிடைக்க வழி செய்தேன். எனது ஆற்றலை கண்ட லுசான் மாநில தமிழ் மன்றத்தினர் அங்கு மிருதங்கம் கற்பிக்க அழைத்து கற்பித்தேன். பலமாணவர்கள் சிறந்த முறையில் கற்றார்கள். ருக்ஷன் என்னும் மாணவன் அங்கு நல்ல கலைஞராகத் திகழ்கின்றார். தாய் தந்தையர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே.

2011 காலப்பகுதியில் இந்தியாவின் திருவாவடுதுறை ஆதீனம் நடத்திய இந்து ஆய்வு மாநாட்டில் நடன நிகழ்விற்கு மிருதங்கம் இசைத்தும் சிதம்பரம் நடேசர் ஆலயத்தில் இசை திருமுறை நிகழ்விற்கும் குறிஞ்சிப் பாடி என்னுமிடத்தில் மூன்று நாட்களாக விநாயகர் ஆலயகும் பாபிஷேகத்தின் போது திருமுறைக்கும் திருவையாறு தியாகராஜ சுவாமிகள் பஞ்சரத்தின ஆராதனையிலும் பல கலைஞர்களின் இசைக்கும் மிருதங்கம் இசைத்து கௌரவிக்கப் பட்டேன்.

**❖ தாங்கள் பெற்ற வெற்றிகள் விருதுகள் பற்றி?**

நானொரு மேடைக்கலைஞனாகவும் அதே நேரம் ஒரு கல்வி மாணாகவும் ஒரு ஆய்வாளனாகவும் சமூகத்தில் வரப்பெற்றதும் இறைவன் படைப்பிலான வெற்றி எனவே குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து ஒரு சிறந்த குரு வாய்த்ததும் வெற்றியே. என்னால் பல மாணவர்கள் சிறந்த முறையில் உருவாக்கி அவர்கள் இன்று இசை மேடைகளை அலங்கரித்து வருவதும் ஒரு வெற்றியே. ஏழுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மிருதங்க போட்டியிலே பங்குபற்றி தங்கப்பதக்கம் சுவீகரித்தமை ஒரு பெருவெற்றியே. ஒரு மாணவன் இந்தியாவிலும் பதக்கம் வென்றார். அதுவும் வெற்றியே. நூல்கள் வெளியிட்டு பரிசில்கள் கிடைத்தமையும் ஒரு வெற்றியே. சிறந்த முறையில் நாட்டிய உருப்படிகள் தயார் செய்து அவை மேடையில் நிகழ்த்தப்பட்டமையும் ஒரு வெற்றி எனலாம். கலையினூடாக பல நாடுகள் சென்று கௌரவம் பெற்றமையும் வெற்றியே. அரச உயர் விருதுகள் கிடைக்கப்பெற்றமையும் வெற்றி தானே. இலங்கை ஒலிபரப்பு, ஒளிபரப்பு கூட்டுத்தாபனங்களில் உயர் தர கலைஞனாக இருப்பதும் வெற்றியே. எல்லாவற்றிற்கும் மேலாக சமயப் பெரியார்களான அளவையூர் விநாசித்தம்பி ஐயா அவர்களின் ஆசி கிடைத்ததும் ஒரு வெற்றி தான். அதை விடமேலான படைத்த இறைவன் என்னை இக்கலைக்கு தொண்டாற்ற கருணை கொண்டதும் ஒரு பெரு வெற்றியே.

விருதுகள் எனும் போது கல்வியூடாக சங்கீதரத்தினம் பட்டப்படிப்பும் உயர் கல்வியூடாக முதுதத்துவமானி M.Phil பட்டமும் கலாநிதி Phd உயர்பட்டமும் கிடைத்ததுடன் சமூகத்திலே நிறுவனங்களூடாகவும் சமய நிறுவனங்களூடாகவும் பல பட்டங்களும் பரிசில்களும் பல பதவிகளும் கிடைக்கப் பெற்றேன். விருதுகள் மாத்திரம் சுமார் இருபதுவரை இருக்கின்றது.

**❖ இறுதியாகத் தாங்கள் கலையுலகிற்கு கூற விரும்புவது?**

எக்கலையாக இருந்தாலும் ஐயம் திரியறக்கல். கலைக்கு மதிப்புக்கொடு. பிறகலைஞனை நேசி. பிறர் வளர்ச்சிகண்டு பொறாமைப்படாதே. நீயும் வளர முயற்சி செய். கலை உலகில் பிரகாசிப்பதாய் இருந்தால் இறைபக்தி, குருபக்தி இருக்க வேண்டும். வளர வழி செய்த நல்லவர்களை மறவாதே.

கலை இன்பமே நிலை
இன்பமாம்

**“வாழ்க இசைக்கலை
வளர்க இசைக்கருவிகள்”**

**நேர்காணல்:
ஜெயம் ஜெகன்**

# 'அனைவரையும் நேசி அனைவருக்கும் சேவை செய்'

# சத்திய சாயி பாபா அவதரித்த நாள் இன்று



"பரித்ராணாயஸாதூனாம்
விநாசாய சதுஷ்க்ருதாம்
தர்ம சமஸ்தாபனார்த்
தாய சம்யவாமி யுகே யுகே"
பகவத் கீதை(4-8)

சாதுக்களை காப்பதற்கும் துஷ்டர்களை அழிப்பதற்கும் தருமத்தை நிலைநாட்டுவதற்கும் யுகம் தோறும் அவதரிப்பேன்.

கிருஷ்ண பகவானின் பிரகடனத்தின்படி கலியுகத்தில் பகவான் சத்திய சாயி பாபா இந்தியாவில் ஆந்திர மாநிலத்திலுள்ள புட்டபர்த்தி என்னும் பின்தங்கிய சிறு கிராமத்தில் 1926 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி அவதரித்தார். இவருக்குப் பெற்றோர்கள் வைத்த பெயர் சத்திய நாராயணராஜுவாகும். இவருடைய பிறப்பு அற்புதமானதொன்றாகும். தாயார் தான் கிணற்றடியில் நீர் அள்ளும் பொழுது கிண்ணியிலிருந்து ஒரு நீலக் கோள் வயிற்றினுள் புகுந்ததென்றும் கர்ப்பவதியான அறிகுறிகள் தென்பட்டன என்றும் சுவாமியின் முன்னிலையில் பிரபல பத்திரிகையாளரான காஞ்சியாவுக்கு நேர்காணலின் போது சொன்னார்.

கர்ப்பத்திலிருக்கும்போதே வீட்டிலுள்ள வாத்தியங்கள் தாமாகவே இசைந்துள்ளன. இது ஒரு தெய்வீக அறிவிப்பு என்று சொல்லியுள்ளார்கள். சத்திய நாராயணன் சிறு வயதிலே சக மாணவர்களுக்கு போதனை, நாடகங்கள், பாடல்கள் இவற்றுடன் பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார். இவருடைய செய்கைகளை விளங்காத பெற்றோர் இவருக்குப் பேய் பிடித்து விட்டதென்று நினைத்து ஒரு பேய் கலைப்பவனிடம் கொண்டு சென்று அங்கே அவனின் சித்திரவதைக்குள் ளானார். எதையும் பொறுமை யாகத் தாங்கிக் கொண்டார். நஞ்சூட்டிக் கொல்லவும் எத்தனித்தார்கள். நஞ்சூட்டியவர்கள் பின்பு மன்னிப்பு கேட்டார்கள்.

பாடசாலையில் படிக்கும் பொழுது ஆசிரியர் இவர் தான் சொல்வதில் கவனம் செலுத்தவில்லையென நினைத்து தண்டனையாகக் கதிரை மேல் நிற்க வைத்தார். பாடம் முடிந்து அடுத்த பாட ஆசிரியர் வந்த போதும் இவ்வாசிரியரால் கதிரையை விட்டு எழும்ப முடியவில்லை. சத்தியாவைக் கீழே இறங்கச் சொன்னதும் ஆசிரியரால் கதிரையை விட்டெழும்ப முடிந்தது. சுவாமியிடம் ஏன் இப்படியெல்லாம் நாடகம் நடத்தினீர்கள் எனக் கேட்ட போது எனது தெய்வீகத்தை வெளிப்படுத்தும் நாள் அணுகிறது. அதற்கு என்னுடன் இருப்பவர்களைத் தயார் செய்கிறேன் என்று கூறினார். சுவாமியினுடைய வாழ்க்கை வரலாறு சத்தியம் சிவம் சுந்தரம் என்று நூலில் பேராசிரியர் கஸ்தூரியினால் வெளியிடப்பட்டுள்ளது. சுவாமியும் அவர் எழுதியுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார்.

1940 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி சத்திய நாராயணன் விசித்திரமாகக் காணப்பட்டார். தமையனார் இவருக்குப் பைத்தியம் என்று நினைத்து தகப்பனாரை வரவழைத்தார். பாலசாயி சுற்றியிருந்த மக்களுக்குப் போதித்தும் உணவுப் பண்டங்களை சிருஷ்டித்தும் பிரசாதமாகக் கொடுத்தார். அப்போது தகப்பனார் கோபத்துடன் தடியை ஓங்கிக்கொண்டு நீ யார்? பிசாசா? பைத்தியனா? என்று கேட்க, நான் சாயி பாபா என்று பதிலளித்தார். தகப்பனாரைப் பார்த்து நீங்கள் வணங்கிய வெங்கல தூதரின் பிரார்த்தனையினால் இங்கு பிறந்துள்ளேன் எனக்கூறினார். இதை நாங்கள் எப்படி நம்புவது என்று தகப்பனார் கேட்க, மல்லிகைப் பூக்களை கையிலெடுத்து நிலத்தில் போட பூக்கள் சாயி பாபா என்ற எழுத்தில் (தெலுங்கில்) விழுந்து ஒழுங்காகக் கிடந்தன. முதன்முறையாகத்தான் ''சாயி பாபா'' என்று பிரகடனம் செய்துள்ளார். மக்களும் இவரின் தெய்வீகத் தன்மையை ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர்.

சிறு வயதிலேயே இவரின் தெய்வீகத் தன்மையில் முழு நம்பிக்கை கொண்டவர்களில் பேரனார் கொண்டமராஜு, அடுத்த வீட்டு கர்ணம் சுப்பம்மா, சில ஆசிரியர்கள், மாணவர்கள் சிலர், அயலவரான ஆஞ்சநேயர் என்போர் அடங்குவர். சிறு வயதிலே அற்புதங்கள் புரிவதுடன் வேத சாஸ்திரங்களுக்கு விளக்கம் கொடுத்ததால் பிரம்ம ஞானி என்று அழைக்கப்பட்டார்.

1940 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி பாடசாலைக்குப் போகும் வேளையில் திரும்பி வந்து புத்தகங்களைக் கீழே போட்டு விட்டு "நான் எனிமேல் உங்களது சத்திய நாராயணன் இல்லை. எனது மாயை போய்விட்டது. பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள். என்னைத் தடுக்காதீர்கள்'' என்று உரக்கச் சொல்லி அயலில் உள்ள தோட்டத்தில் சிறிய பாறைக் கல் மீது அமர்ந்து கொண்டார். சிறிய கூட்டம் கூடி விட்டது. அவர்களுக்கு

"மாசை பஜதே குரு சரணம்
துஸ்தா பலசாகர தரணம்"
"பிறவிக் கடலைக் கடப்பதற்கு மனதைப் பகவானின் பாதங்களில் வைத்து சரணடையவும்" என்ற பஜனைப் பாடலைப் பாடிக் கொடுத்தார். இதன் பின்பு அன்றிலிருந்து மக்கள் சத்திய சாயி பாபா என்றே அழைக்கத் தொடங்கினார்கள். சத்தியம் என்றால் நிரந்தரமான எல்லாவற்றிற்கும் ஆதாரமானதொன்று என்பதேயாகும். சாயி என்றால் உன்னதமான தெய்வீகத் தாய் என்ற அர்த்தம். பாபா என்றால் உன்னதமான தந்தை என்ற அர்த்தமாகும்.

இக்கலியுகத்தில் தர்மம் சீரழிந்து வன்முறைகள் பெருகி, அனர்த்தங்கள் பெருகி மனிதனை மனிதன் அழிக்கும் காலம். இச்சீர்கேட்டைச் சீராக்க தெய்வத்திற்கு நீண்ட காலம் தேவையென்று தெய்வம் அடுத்தடுத்து மூன்று தடவைகள் அவதரிக்க வேண்டியுள்ளதென சத்தியசாயி பாபாவே கூறியுள்ளார். முதலாவது அவதாரம் சீரடி சாயி பாபா (1821-1918), இரண்டாவது அவதாரம் சத்திய சாயி பாபா (1926-2011) நிகழ்ந்து விட்டன, மூன்றாவது அவதாரம் பிரேம சாயி பாபா இன்னும் சில வருடங்களில் தன்னை வெளிப்படுத்துவாரென சத்திய சாயி பாபாவே கூறியுள்ளார்.

இவரின் பிரதான ஆச்சிரமம் புட்டபர்த்தியில் அமைந்துள்ளது. அங்கே சகல மத விழாக்களை சகல தேசத்தவர்களும் வந்து கொண்டாடுவார்கள். மத நூல்களிலுள் ஆழ்ந்த கருத்தை மிகவும் எளிமை யாக விளக்கியுள்ளார். முக்காலமும் அறிந்தவராலேயே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றைக்கூற முடியும்.

24.4.2011 இல் மகா சமாதியடைந்தார். அவரின் மகா சமாதி தெய்வீக மகா சக்தியின் மையமாக விளங்குகிறது. உடலை விட்டாலும் தான் எங்கும் இருப்பதாகவும் எல்லோரில் இருப்பதாகவும் பல வழிகளில் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தன்னை முழுமையாக ஒருவராலும் அறிய முடியாதென்றும் ஞானம் பெற்றவர்களாலும் ஓரளவுதான் புரிந்து கொள்ளலாமென்றும் கூறியுள்ளார். தான் ஆதிசக்தி, ஆதி புருஷர், பரம்பொருள் எல்லாவற்றிற்கும்தானே ஆதாரம் என்று பிரகடனப்படுத்தியுள்ளார்.

பகவானின் போதனைகளின் சாராம்சம்
''அனைவரையும் நேசி
அனைவருக்கும் சேவை செய்"
"எப்போதும் உதவி செய்
ஒருபோதும் தீங்கு செய்
யாதே என்பதேயாகும்''

அவரை எமது இதயத்தில் உணர்ந்த நாளே அவர் எம்மில் உதித்த திருநாளாகும்.

ஜெய் சாயிராம்.

**டாக்டர்**
**சி.கணேசமூர்த்தி**
**யாழ்ப்பாணம்.**

# சர்வதேச நடனத் திருவிழா முதன் முறையாக யாழில்

(யாழ்ப்பாணம்)

சமூகங்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் நற்றன்டா அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச நடனத் திருவிழா முதன் முறையாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளதாக நற்றன்டா அமைப்பின் தலைவர் கபில பளிகவர்தன தெரிவித்துள்ளார்.

திருமறைக் கலாமன்ற கலைத்தூது கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நடனத் திருவிழா கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக இலங்கையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. சர்வதேச கலைஞர்கள் மற்றும் உள்ளூர்க்கலைஞர்கள் கூட்டாக பங்குபற்றும் நடன விழா இம்முறை முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கொழும்பில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

யாழில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் திருமறைக்கலாமன்ற மாணவர்களின் நிகழ்வு உட்பட இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, லண்டன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள் பங்கு பற்றி நடன நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். அத்துடன் இலங்கையில் வேறு மாவட்டங்களிலுள்ள நடனக் கலைஞர்களும் இதில் பங்குபற்றவுள்ளனர்.

இந்த நடனத் திருவிழாவில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கலைகளுடன் தற்போதைய நவீன கலையையும் சேர்த்து நடத்தவுள்ளோம். இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதற்கு பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை பெருமளவில் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நெடுந்தீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு திறப்பு





(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு போன்றன இயங்கும் புதிய கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலனினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிராந்திய சுகாதார பணிப்பாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளர் மதிவண்ணன் (சுதன்) மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

# பாரதம்

## இராணுவ விமான தயாரிப்பில் இந்திய மத்திய அரசு ஆர்வம்



(டில்லி)

மேக் இன் 'இந்தியா' திட்டத்தில் ரூ.11,929 கோடி மதிப்பில் 56 ராணுவ விமானங்களை உள்நாட்டிலேயே தனியார் நிறுவனம் மூலம் தயாரிக்கும் புதிய ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.

2011இல் ராணுவ பயன்பாட்டிற்காக விமானங்கள் வாங்க ஆலோசனை நடத்தப்பட்டது. 2013 மே மாதம் இதற்காக உலக அளவில் டெண்டர் வெளியிடப்பட்டது. இராணுவ சரக்கு போக்குவரத்து விமானங்கள் தயாரிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழும் எம்பரர், லாக்ஹீட் மார்ட்டின், ஏர் பஸ், இல்சின், காசா, சாப் & அலினியா உள்ளிட்ட 8 நிறுவனங்கள் டெண்டருக்காக விண்ணப்பம் செய்தன. அப்போது பொதுத்துறை நிறுவனங்களை ஓரங்கட்ட முயல்வதாக எழுந்த புகாரின் அடிப்படையிலும், நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வந்ததாலும் இத்திட்டம் தடைப்பட்டது.

பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. அரசு மத்தியில் அமைந்தபின் இந்த திட்டம் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

அப்போது டாடா ஏர் பஸ் மட்டுமே களத்தில் இருந்தது. இதையடுத்து ஒற்றை டெண்டர் அடிப்படையில் 2015 மே மாதம் புதிய இராணுவ சரக்கு விமானங்கள் தயாரிக்கும் முயற்சியில் டாடா ஏர் பஸ் நிறுவனத்துடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. அப்போதைய மத்திய இராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர் இதற்கான நடவடிக்கையில் இறங்கினார். இதற்காக மத்திய அரசு ரூ.11,929 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து இதற்கான தயாரிப்பு பணிகள் தொடங்கும். அதன் அடிப்படையில் முதல் 16 விமானங்கள் வெளிநாட்டில் இருந்து வாங்கப்படும். மீதமுள்ள 40 விமானங்கள் இந்திய நிறுவனமான டாடா ஏர் பஸ்சுடன் இணைந்து அடுத்த 8 ஆண்டுகளில் தயாரிக்கப்படும். 56 விமானங்கள் தயாரித்த பின், இந்திய விமானப்படையில் 1960 முதல் பயன்படுத்தப்பட்டு வரும் ஆவ்ரோ வகையான விமானங்கள் அகற்றப்படும். இதற்கான இறுதி ஒப்பந்த கையெழுத்து விரைவில் நடைபெறவுள்ளது என்று மத்திய இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேக் இன் இந்தியா திட்டத்தின்படி குறைந்தது 6 மிகப் பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசு ரூ.3.5 இலட்சம் கோடியை பல்வேறு கட்டங்களாக ஒதுக்கியுள்ளது. 56 புதிய விமானம் தயாரிக்க ஒப்பந்தம் செய்ததன் மூலம் ● ஆண்டுகளாக இழுத்தடித்து வந்த பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி இராஜி...


# மக்கள் கொண்...

## ராபட் முகாபே சாம்ராஜ்ஜி...

(ஹராரே)

**சிம்பாவே நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ராபட் முகாபேவை தகுதி நீக்கம் செய்வதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்ட நிலையில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். இதனையடுத்து அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**





ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் ராபர்ட் முகாபே 1980ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். அதிகாரத்தை தனது வசம் கொண்டுவர முயற்சிப்பதாக கூறி அந்நாட்டு துணை ஜனாதிபதி எமர்சன் நாங்காக்வாவை முகாபே பதவி நீக்கம் செய்தார்.

இதனால், ஆளும் ஷானு - பி.எப் கட்சியில் பிளவு ஏற்பட்டது. இராணுவ தலைமை தளபதி ஜெனரல் சிவெங்கா, துணை ஜனாதிபதி நாங்காவாவுக்கு ஆதரவாக நின்றார். இதனால், அந்நாட்டு அரசியலில் குழப்பநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, கடந்த 15 ஆம் திகதி ஆட்சி அதிகாரத்தை ராணுவம் கைப்பற்றியது. ஜனாதிபதி முகாபே மற்றும் அவரது குடும்பத்தினர் ராணுவத்தின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, ஜனாதிபதி முகாபேவை பதவி நீக்கம் செய்து, நாடு கடத்துவது குறித்து மாகாண ஆளுநர்கள் மற்றும் ஆளும் கட்சியின் அவசரக் கூட்டம் ஹராரே நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முகாபேவை ஆட்சியை விட்டு நீக்க வேண்டும் என கடந்த ஒன்றரை ஆண்டாக பிரசார இயக்கம் நடத்தி வந்த சிம்பாவே நாட்டின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் கிறிஸ் முட்ஸ்வாங்வா இந்த கூட்டத்தில் பங்கேற்றார்.

ராபர்ட் முகாபேவை ஆளும்கட்சி தலைவர் பதவியில் இருந்து நீக்கியும் கட்சியின் புதிய தலைவராக முன்னாள் துணை ஜனாதிபதியை நியமித்தும்



## 50 ஆண்டுகளுக்கு பின் இந்தோனேசியா பாலி தீவில் எரிமலை வெடித்தது

(ஜகார்த்தா)

50 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தோனேசியா பாலி தீவில் ஆகங் எரிமலை வெடித்துள்ளதால் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்தோனேசியா தீவுக் கூட்டங்கள் அடங்கிய நாடு. இங்கு பல தீவுகளில் எரிமலைகளுள்ளன. பாலித்தீவில் 'ஆகங்' என்ற எரிமலை உள்ளது.

இந்த எரிமலை தற்போது வெடிக்க தொடங்கியுள்ளது. அதில் இருந்து புகை வெளியேறி 2300 அடி உயரத்துக்கு எழுகிறது. இதனால் எப்போது வேண்டுமானாலும் இந்த எரிமலை வெடித்து சிதறும் நிலை உள்ளது.

எனவே அதன் அருகே தங்கியிருக்கும் கிராம மக்கள் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது.

அதைதொடர்ந்து இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குடும்பம் மற்றும் கால்நடைகளுடன் வெளியேறிவிட்டனர்.

பாலித்தீவு அழகிய பகுதிகளை உள்ளடக்கியது. விடுமுறை தீவு என அழைக்கப்படும். இங்கு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருகிறார்கள். தற்போது இங்கு எரிமலை வெடிக்க தொடங்கியுள்ளதால் சுற்றுலா பயணிகள் வரத்து குறைந்துவிட்டது.

இதனால் அங்கு ரூ.500 கோடி அளவுக்கு வருமானம் பாதிக்கும் அபாயம் உள்ளது. இங்கு 1963ஆம் ஆண்டு அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்பு எரிமலை வெடித்தது. அப்போது 1600 பேர் உயிரிழந்தனர்.

அதன் பின்னர் தற்போது தான் இந்த எரிமலை வெடித்துள்ளது. இருந்தும் தற்போது வரை பாலித் தீவுக்கான விமான சேவை நிறுத்தப்பட்டது.

எந்தவித பாதிப்பும் இன்றி விமானங்கள் புறப்பட்டு செல்கின்றன. சுற்றுலா பகுதிகள் பாதுகாப்பாக உள்ளன என இந்தோனேசிய பேரிடர் மேலாண்மை தெரிவித்துள்ளது. (இ-7)

## பிரதமர் பதவியை இ... சாட் ஹரிரி நேற்று ல...

(பெய்ரூட்)

உயிருக்கு ஆபத்து இருப்பதால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த சாட் ஹரிரி நேற்று நாட்டின் சுதந்திர தின விழாவில் பங்கேற்பதாக லெபனான் திரும்பினார்.

லெபனான் பிரதமர் சாட் அல் ஹரிரி கடந்த 3 ஆம் திகதி திடீரென சவுதி அரேபியாவுக்குச் சென்றார். பின்னர் மறுநாள் தொலைக்காட்சியில் தோன்றி பேசிய அவர், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக அறிவித்தார். பதவியை இராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தப்பட்டதாக அவருக்கு நெருக்கமான லெபனான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் அவரது இராஜினாமாவை லெபனான் ஜனாதிபதி மைக்கேல் ஆன் ஏற்கவில்லை. அவர் உடனடியாக நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கூறி வந்தனர். சவுதியில் அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். இதற்கிடையே ஹரிரிக்கு பிரான்ஸ் நாடு அழைப்பு

# வெளிநாடு



# ஜினாமா!

# டாட்டம்

## ஜியம் சரிந்தது

கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுப் பட்டது. 24 மணி நேரத்திற்குள் கட்சித்தலைவர் மற்றும் ஜனாதிபதி பதவியிலிருந்து முகாபே இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால்', இராஜினாமா செய்ய முகாபே மறுத்து விட்டதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், சிம்பாவே பாராளுமன்றம் அவசரமாக நேற்று முன்தினம் கூடியது. அப்போது ஜனாதிபதி முகாபேவை பதவி நீக்கம் செய்வதற்கான மசோதாவை ஆளும்கட்சி எம்.பிக்கள் தாக்கல் செய்தனர். அதன் மீதான விவாதத்தில் பெரும்பாலானோர் முகாபே பதவி விலக வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்நிலையில் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர், கூறுகையில், ஜனாதிபதி பதவி விலகுவதோடு பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்த வேண்டும் என்றார்.

இதன்போது குறிப்பிட்ட நாடாளு மன்ற சபாநாயகர் ஜனாதிபதி முகாபே தானாக முன்வந்து பதவி விலகி விட்டதாக அறிவித்தார். அவரது அராஜினாமா கடிதமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. இதையடுத்து அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதம் முடித்து வைக்கப்பட்டது.

முகாபே இராஜினாமா செய்ததையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கொண் டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். புதிய ஜனாதிபதியாக முன்னாள் துணை ஜனாதிபதி எமர்சன் நாங்காக்வா விரைவில் பதவியேற்பார் என எதிர் பார்க்கப்படுகிறது. (இ-7)



# தீவிரவாதிகளின் முகாம் மீது அமெரிக்கா கடும் தாக்குதல்

## 100 பேர் உயிரிழப்பு!

(மொகாடிஷூ)

சோமாலியர் தலைநகர் மொகாடிஷூ அருகே தீவிரவாதிகள் முகாம் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு தீவிரவாதிக்ளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசை கவிழ்த்து விட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது.



உள்நாட்டு இராணுவத்தினர் மீது அவ்வப்போது அதிரடியாக தாக்குதல் நடத்திவரும் இந்த தீவிரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகர் மொகாடிஷூ நகரின் வடமேற்கு திசையில் 200 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தீவிரவாதிகள் முகாம் மீது நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் சோமாலியா அரசு படைகளுடன் இணைந்து அமெரிக்கா ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இத் தாக்குதலில் 100க் ம் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக ஆபிரிக்கா வில் உள்ள அமெரிக்க கூட்டுப் படையின்ர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ரோஹிஞ்யா மீதான வன்முறை இன அழிப்புக்கான அடையாளம்

## அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்கள், இன அழிப்புக்கான அடையாளமென, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஜெஃப் மெர்க்லி குற்றஞ் சாட்டியுள்ளார்.

ராஹினி மாநிலத்தின் நிலைமையை கண்காணிக்கும் நோக்கில் ஜெஃப் மெர்க்லி தலைமையிலான அமெரிக்க காங்கிரஸ் குழுவினர், அங்கு சென்றுள்ளனர். இதனையடுத்து, மியன்மாரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இந்தக் குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'மியன்மாரின் ராஹினி மாநிலத்தைச் சேர்ந்த ரோஹிஞ்யா முஸ்லிம்களில் பலர், வன்முறைச் சம்பவங்க ளால் பாதிக்கப்பட்ட நிலையில் அவல வாழ்க்கைக்கு முகங் கொடுத்துள்ளனர். தங்களது குடும்ப உறுப்பினர்கள் தங்களது கண்முன்னால்கொலை செய்யப்பட்டும், பெண்கள் பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களைக் கண்ட பலர் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

மேலும், 'வன்முறை யால் பாதிக்கப்பட்டுள்ள ரோஹிஞ்யா முஸ்லிம்கள் பங்களாதேஷூக்கு தப்பிச்செல்வதற்கு வழிவகுத்துள்ளதுடன், இதுவரையில் சுமார் 6 இலட்சம் பேர் பங்களாதேஷில் தஞ்சம் கோரியுள்ளனர். அத்துடன், ராஹினி மாநிலத்தில் சுமார் 300 கிராமங்கள் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டுள்ளன' எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.




இந்த மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை நோக்கும்போது, இன அழிப்புக்கான அடை யாளத்தையே வெளிக்காட்டுகின்றது. எனவே, இந்த மக்கள் படும் துயரத்தைக் கண்டு நாமும் கவலையடைந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஈராக்கில் குண்டு வெடிப்பு 23 பேர் உயிரிழப்பு

## 60 பேர் படுகாயம்

(டமாஸ்கஸ்)

வட ஈராக்கின் ருஷ் குர்மடு (Tuz Khurmatu) நகரில் இடம்பெற்றுள்ள கார்க் குண்டு வெடிப்பில் சிக்கி சுமார் 23 பேர் உயிரிழந்துள்ளதுடன், 60 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ருஷ் குர்மடுவிலுள்ள மரக்கறிச் சந்தையொன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இதுவரையில் எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்க முன்வரவில்லையெனவும் இது தொடர்பான விசாரணையை முன் னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# அமெரிக்கக் கடற்படை விமானம் பிலிப்பைன்ஸ் கடலில் விழுந்தது

(டோக்கியோ)

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இராணுவ விமானம் நேற்று நிலை தடுமாறி பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் விழுந்தது.


தீவு கூட்டமான பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒக்கினாவா தீவை ஒட்டியுள்ள கடல் பகுதி வழியாக அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான ஒரு இராணுவ விமானம் நேற்றுப்பறந்து கொண்டிருந்தது.

வழக்கமான பயிற்சிக்கு பின்னர் அங்குள்ள அமெரிக்க கடற்படையின் ரொனால்ட் ரீகன் போர் கப்பலில் தரை இறங்குவதற்காக சென்ற அந்த விமானம் நிலை தடுமாறி ஒக்கினாவா தீவின் தென்கிழக்கே கடலில் விழுந்தது.

இவ்விபத்து பற்றி அறிய வந்த பிலிப்பைன்ஸ் கடலோரக் காவல் படையினர் மற்றும் அமெரிக்க கடற்படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த 11 பேரை தேடும் பணியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அமெரிக்கக் கடற்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இராஜினாமா செய்த லெபனான் திரும்பினார்



விடுத்தது. லெபனான் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடக்கி ஹரிரியை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் முயற்சித்துவரும் நிலையில் சவுதி அரேபியா வில்இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட சாட் ஹரிரி பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் சென்றார்.

இந்நிலையில், நேற்றுக்காலை சாட் ஹரிரி லெபனான் நாட் டுக்கு திரும்பினார். லெபனான் திரும்பிய ஹரிரி அவரது தந்தையும், முன்னாள் பிர தமருமான ரபிக் ஹரிரியின் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்தினார். (இ-7)

# பலத்த பாதுகாப்புடன் மூகாம்பிகையை தரிசித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க





(கொழும்பு)

நான்கு நாட்கள் இந்தியாவுக்குப் ப்யணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் உடுப்பியில் உள்ள, கொல்லூர் மூகாம்பிகை அம்மன் ஆலயத்தில் தரிசனம் செய்தார்.

அரசிரூர் உலங்கு வானூர்தி தளத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இறங்கிய பிரதமர் அங்கிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆலயத்துக்கு வாகனத்தில் சென்றார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஆலயத்தில் அவர் வழிபாடுகளை ஆரம்பித்தார்.

தனது துணைவியார் மைத்திரியுடன் ஆலயத்துக்குச் சென்ற பிரதமருக்கு நிர்வாகத்தின் சார்பில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க அங்கு மூன்று நாட்கள் நடைபெறும் சட்ட சண்டிக யாகத்திலும் பங்கெடுத்தார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு ஆலயத்துக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் இருந்த கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. ஆலயத்தைச் சுற்றியும் நகரப்பகுதியிலும் பாதுகாப்பு. பலப்படுத்தப் பட்டிருந்தது. (இ-7)

# பூஜிதவின் கருத்து குறித்து நாமல் அதிருப்தி





(கொழும்பு)

சட்டம் மற்றும் அமைதியை ஒழுங்கான முறையில் செயற்படுத்த முடியாத பொலிஸ்மா அதிபர் அரசியல் குறித்து கருத்து வெளியிடுவது. ஏற்றுக்கொள்ள முடியாதது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற் கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

காலி - ஜிந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை பாடமாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பூஜித ஜெயசுந்தர தெரிவித்திருந்தார்.

மேலும். அதிகாரப் பசியுடைய சில இனவாத அரசியல்வாதிகள் உள்ளிட்ட குழுக்களின் தேவைக்கு ஏற்ப. இனவாதம் அல்லது தீவிரவாதத்திற்கு தள்ளப் படுவது குறித்து ஆராய வேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 56 சீன படையதிகாரிகள் இலங்கையில்



(கொழும்பு)

சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெரியதொரு இராணுவ அதிகாரிகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஷி ஷோங்வூ தலைமையிலான 56 சீனப் படை அதிகாரிகளைக் கொண்ட குழுவே இலங்கைக்குப் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்புகள். கடந்த கால போர் அனுபவங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த விடயங்களை நேரில் அறிந்து கொள்ளவே சீனாவின் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக குழு கொழும்பு வந்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ஷி ஷோங்வூ தலைமையில், ஐந்து அதிகாரிகள் நேற்று முன்தினம் காலை இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.(இ-7)

# சிறுவர், மகளிர் விவகார அமைச்சுடன் கைகோர்க்கவுள்ளது கல்வி அமைச்சு



(கொழும்பு)

முன்பள்ளிகளின் தரத்தை அதிகரிக்க வருங்காலத்தில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் இணைந்து செயற்பட கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

முன்பள்ளிகள் சிறார்களின் வாழ்வில் அடித்தளத்தை வழங்குவது என்பதால், அது குறித்து அவதானம் செலுத்துவது அவசியம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சர்வதேசத்தின் உதவியுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் முன்பள்ளிகளுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும் எனவும் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அழகாகக் குட்டும் விதம்!

என் நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார் "நான் எப்படிக் கார் ஓட்டுகிறேன்" என்று. அவர் எதிர்பார்த்தது ஒரு நல்ல பாராட்டுரையை.

நான் சொன்னேன் "நன்றாகத்தான் ஓட்டுகிறீர்கள் நான் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை. ஆனால் கிளட்ச் மீதே காலை வைத்தபடி ஓட்டுகிறீர்கள். அந்த வளைவில் ஒரு சைக்கிள்காரர் வந்த போது இலேசாகப் பயமுறுத்தி விட்டீர்கள். மற்றும்படி உங்களுடைய டிரைவிங் மிக நன்றாக இருக்கிறது. பாராட்டுகிறேன்" என்றேன்.

இதையே நான் "என்னத்தை ஓட்டு றீங்க போங்க? கிளட்ச்சு மேலே இப்ப டியா காலை வச்சுக்கிட்டு ஓட்டறது? அந்த சைக்கிள்காரர் வந்ததும் நிச்சயம் மோதிடப் போறீங்களென்று நினைச்சேன். அந்த ஆள் செத்தே போயிருப்பான். நீங்க ஜெயில்லே இருந்திருக்கணும் இந்தநேரம்" என்று சொல்லியிருக்கலாம்.

மாவு ஒன்றுதான் அதைத் தேவைக்கேற்ப தோசையாகவும் அப்பமாகவும் ஊத்தப்பமாகவும் குழிப் பணியாரமாக வும் இட்லியாகவும் ஆக்கிக் கொடுப்பது கைப்பக்குவம்தான். வாய்ப் பக்குவமும் இதைப் போன்றதுதான்.

குறைகளையும் தவறுகளையும் நாம் சுட்டிக் காட்டலாம். ஆனால் அதைச் சுட்டிக் காட்டுகிற விதம் மற்றவர்களைக் காயப் படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது.

ரொம்ப நல்லா வரைஞ்சிருக்கீங்க. ஆனால் உயிரோட்டம் கொஞ்சம் குறை யுது. சரி பண்ண முடியுமா பாருங்க.

நீட் டைப்பிங். இந்த இடத்தில் வந்திருக்கிற பாரா அந்த இடத்தில் வந்திருந்தா இன்னமும் நல்லா இருந்திருக் கும்.

பிரமாதமா ஆட்றீங்க இன்னுங்கூட உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆடப் பாருங்க. பின்னால நல்லா வருவீங்க. இப்படிப்பட்ட உதாரணங்களுடன் எந்த ஒரு விடயத்தையும் அணுகலாம்.

குறைபாட்டை இரத்தினச் சுருக்கமாச் சொன்னால் அது தவறாகப் பொருள் பட்டுவிடும். அதைச் சற்றே இனிமை குழைத்தும் சற்றே விரிவாகவும் சொல்ல வேண்டும். அதாவது எதையும் தந்தி வாக்கிய மாகச் சொல்லக்கூடாது.

உதாரணமாக நீங்க நடந்துக்கிட்ட விதம் கொஞ்சமும் சரியில்லை என்று சொல்லிவிட்டு நகர்ந்து விடாமல் என்ன சரியில்லை, ஏன் சரியில்லை என்பதைச் சற்றே விரிவாகவும் பக்குவமாகவும் எடுத்துச் சொல்ல வேண்டியதும் முக்கியம். இன்னும் தெளிவாச் சொல்ல வேண்டுமானால் நாம் சொல்லுகிற செய்திகளையும் கண்ணோட்டங்களையும் வைத்து நாம் செய்தது கொஞ்சம் சரியில்லை என்று அவர்களை உணர வைக்க வேண்டுமே தவிர அவர்கள் மனதில் தானாகத் தோன்ற வேண்டிய இந்த வாக்கியத்தை நாம் அப்படியே எடுத்துச் செல்லக் கூடாது.

அப்படிச் சொன்னால் அது அவர்க ளுக்கு உறைக்கவும் உறைக்காது. அது நமக்கு அழகுமாகது .சொல்ல விரும்பும் எதையும் முகம் மாறாமல் இயல்பாச் சொல்ல வேண்டும். தேவை எனில் சிரித்தபடியே சொல்லிவிடு வது நல்லது.

இப்படியெல்லாம் மற்றவர்களை குட்டினால் அது தலையில் அல்ல இதயத்திலேயே அழுத்தமாக விழும். ஆனால் இதற்கு முன் நம் மனத்திற்குள் ஒரு கேள்வி எழுப்பப்பட வேண்டும். அது நாம் குட்டத்தான் வேண்டுமா என்பது.

**லேனா தமிழ்வாணன்**

# விளையாட்டு ஏலத்துக்கும் ஆணைக்குழு வேண்டுமாம்

## ஐ.தே.க.செயலாளர் ஹாசிம் கோரிக்கை

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏலத்தைப் பெற்றுக்கொள்வதில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் திறன் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜே.வி.பி.எம். பியான டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸவால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மேலதிகமான தகவல்களைத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கொமன்வெல்த் கேம்" என்ற பெயரில் இலங்கை வங்கியில் ஒரு கணக்கு பேணப்பட்டு வருகின்றதா? என்பதையும் ஆம் எனில், அக்கணக்கு யாரால் பேணப்படுகின்றது என்பதையும் அது ஆரம்பிக்கப்பட்ட திகதி என்னவென்று. நலிந்த ஜயதிஸ்ஸ கேள்விகளைக் கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் கபீர் ஹாசிம், அவ்வாறானதொரு கணக்கு தற்போது பேணப்படுவதில்லை என்பதனால் ஏனைய கேள்விகள் தமது அமைச்சுடன் தொடர்புடையதல்ல எனத் தெரிவித்ததுடன், அது தொடர்பில் மேலதிகமான தகவல்களை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான கேள்வியை முன்வைத்தமைக்கு உங்களுக்கு நன்றி கூற வேண்டும். சி. டபிள்யூ.ஜி. அம்பாந்தோட்டை 2018 பிரைவட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தின் பெயரில் நடைமுறைக் கணக்கு ஒன்றும், 11 மில்லியன் ரூபாயைக் கொண்டு நிலையான கணக்கு ஒன்றும் பேணப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் வழங்கியுள்ள தகவல்களின் பிரகாரம் 2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை ஏலத்தில் பெற்றுக்கொள்ளுதல், அவற்றுக்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்காக கணக்கு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கு 2010ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 24 ஆம் திகதி உருவாக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் ஆலோசனைக்கு அமைய 2015ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 29ஆம் திகதி மூடப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி 11 மில்லியன் ரூபாயைக் கொண்டு நிலையான கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கணக்கு 7 நாட்கள் மாத்திரமே நடைமுறையில் இருந்துள்ளது.

இந்தக் கணக்குக்கு அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள், அமைப்புகளிடமிருந்து நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதனை நான் சபைக்கு ஆற்றுப்படுத்துவதுடன் சில தகவல்களை இங்கே கூறுகிறேன்.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்து 10 மில்லியன் ரூபாய், மொபிடெல் நிறுவனத்திடமிருந்து 10 மில்லியன் ரூபாய், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்து 7 மில்லியன் ரூபாய், கடற்படை விளையாட்டு அறக்கட்டளையிலிருந்து 2 இலட்சத்து 97ஆயிரத்து 350 ரூபாய், பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பிஎல்சி நிறுவனத்திடமிருந்து 5 மில்லியன் ரூபாய், விளையாட்டுத் துறை அமைச்சிடமிருந்து 10 மில்லியன் ரூபாய், விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து மீண்டுமொரு தடவை 100 மில்லியன் ரூபாய், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடமிருந்து 8 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி நிதியத்திடமிருந்து 15 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி நிதியத்திடமிருந்து மீண்டும் 5 மில்லியன் ரூபாய், இலங்கை மின்சார சபையிடமிருந்து 89 ஆயிரத்து 809 ரூபாய், ஜனாதிபதி நிதியத்திடமிருந்து மீண்டும் 25 மில்லியன் ரூபாய் என நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கணக்குக்கு அரச நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 387 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அது தவிர பேர்பெச்சுவல் எசெட் மெனேஜ்மன்ட் என்ற நிறுவனத்திடமிருந்தும் 15 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலும் பல தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு 700 மில்லியன் ரூபாய் பெறப்பட்டுள்ளது.

இதைத் தவிர மேலதிக தகவல்களை வங்கியிடமிருந்து எமக்குப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அனுமதி அல்லது நீதிமன்ற அனுமதியின் பிரகாரமே நாம் இவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

"எனக்குத் தெரிந்த வகையில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பொதுநலவாய விளையாட்டுக்கான ஏலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக செண்ட் கிட்ஸ் தீவுகளுக்குச் சென்று கேளிக்கை, களியாட்ட நிகழ்வுகளிலும் சபாரிகளிலும் கலந்து கொண்டு பணத்தை வீண் விரயம் செய்திருக்கிறார்கள்" எனவும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி மீது சுஜீவ அதிருப்தி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் தான் கடுமையான அதிருப்தி கொண்டுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, "சிலருடைய தேவைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் அரசியல்வாதிகளை சின்னாபின்னமாக்குவதற்கு ஜனாதிபதி பங்குதாரராக இருக்கக்கூடாது" என்றும் கேட்டுக்கொண்டார்.

"பிணைமுறி கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கான புத்தகம் ஒன்றை எழுதுவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டிக்கொள்வதற்கே மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன அலோசியஸ் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தினேன்" என்றும் அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

"பிணைமுறிகள் தொடர்பில் ஆராய்ந்து புத்தகம் ஒன்றை எழுதுவதற்கு எனக்கு சில தகவல்கள் தேவைப்பட்டன. அதன் காரணமாகவே அவர்களிடம் நான் தொடர்புகளை ஏற்படுத்தி தகவலைப் பெற்றேனே ஒழிய அவரிடமிருந்து எந்தவொரு இலாபத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொடர்புகளை ஏற்படுத்தவில்லை.

குறித்த அலைபேசி தொடர்பைக்கூட முதலாவது பிணைமுறி விசாரணை நிறைவு பெற்றதன் பின்னரே ஏற்படுத்தினேன். அதன்பின்னர் நான் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தவில்லை.

"உங்களுக்கு இவ்விடயம் தொடர்பில் சந்தேகம் ஏதும் காணப்படுமாக இருந்தால், குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் மூலமாகவோ, அல்லது யார் யாருக்குத் தேவை ஏற்படுகின்றதோ? அனைவரும் இதனை ஆராய்ந்துப் பாருக்கலாம்.

ஆனால், எமக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஆராய்ச்சி செய்து பார்த்தபோது பிணைமுறி மோசடி தொடர்பில் அர்ஜுன அலோசியஸ் மீது எந்தவொரு தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரதமர், தவறு செய்யாததன் காரணமாகத் தான் பிணைமுறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையானார். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவதற்காகவே, பிணைமுறி விசாரணைகளை ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்தப் பிணைமுறி மோசடி தொடர்பான பிரச்சினை இப்போது ஏற்படவில்லை. இந்தப் பிரச்சினை 2008 - 2015 காலப்பகுதியிலேயே தோன்றியதாகும். அப்போது ஏன் இவ்விடயம் தொடர்பில் எவரும் பேசவில்லை.

அப்படியானால், இவை அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்வதற்காக நடத்தப்படுகின்றனவா? என அவர் கேள்வி எழுப்பினார். அண்மையில், மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன அலோசியஸ்டன் தொடர்புகளை ஏற்படுத்திய சில அரசியல்வாதிகளின் பெயர்களை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலைப்படுத்தியிருந்தது.

அதில் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் 227 முறை அலைபேசியிலும் 7 முறை வைபரிலும் 8 முறை வட்சப்பிலும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

மேலும், அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹெக்டர் ஹப்புஆமி மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் அர்ஜுன அலோசியஸ்டன் அலைபேசியூடாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைக்கிளில் வரும் நிலைக்கு மகிந்தவைத் தள்ளிவிட்டனர்

(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு சைக்கிளில் வரும் நிலைமைக்கு அவரைச் சூழ்ந்திருந்தவர்களே தள்ளிவிட்டனர்" என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட எம்பியான ஆனந்த அளுத்கமகே சுட்டிக்காட்டினார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் மீதான வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருக்கு முன்னதாக ஒன்றிணைந்த எதிரணியின் எம்.பியான மகிந்தானந்த அளுத்கமகே உரையாற்றினார். அவரது உரைக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

"2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து கொண்டு அநுர பண்டாரநாயக்கவை பதவிக்குக் கொண்டு வருவதற்காக மகிந்தானந்த அளுத்கமகே செயற்பட்டிருந்தார்" என்றார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சபையில், பிரசன்னமாகியிருந்தார்.

"தம்மை சூழ்ந்திருப்பவர்களாலேயே மகிந்த ராஜபக்ஷ தோல்வியைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. இறுதியில் நாடாளுமன்றத்துக்கு சைக்கிளில் வரும் நிலை வரை அவர்கள் முன்னாள் ஜனாதிபதியைக் கொண்டு வந்துவிட்டனர்" எனத் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி மோசடி விவகாரம் பிரதமரை புகழ்ந்த சந்திரிகா

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி விநியோக மோசடி விசாரணை ஆணைக் குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையானமை சுதந்திர மற்றும் ஜனநாயக ஆட்சிமுறையின் புதிய கலாசாரத்தின் ஆரம்பத்தை அடையாளப்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை பிணை முறி விநியோக மோசடி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு தனிப்பட்ட செய்தியை அனுப்பி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க பிரதமர் எடுத்த இந்த தைரியமான முடிவை அவர் பாராட்டியுள்ளார்.

சந்திரிகா அனுப்பியுள்ள செய்தியில்,

'ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் சாட்சியமளிக்க தைரியமான முடிவை எடுத்ததற்காக நான் உங்கள் மீது மரியாதை கொள்கிறேன்.

இது சுதந்திரமான மற்றும் ஜனநாயக ஆட்சியின் தொடக்கமாகும். இந்த கடினமான பணிக்காக எனது ஆதரவு உங்களுக்குள்ளது.

சுதந்திர தினம், மனித ஒழுக்கம் மற்றும் நேர்மையான, மக்கள் சார்புடைய ஆளுமை கொண்ட ஒரு நல்ல நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருக்க முடியாது.

அதிக வலிமையையும் தைரியத்தையும் பெற வாழ்த்துகிறேன்' என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்று மாணவிகள் துஷ்பிரயோகம்; அதிபருக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

பாடசாலை மாணவிகள் மூவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அதிபர் ஒருவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரம் ஐந்தில் கல்வி பயிலும் குறித்த மாணவிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக பாடசாலை அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட அதிபரை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த அதிபரை சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உதவியுடன் விசேட சட்டவைத்திய அதிகாரியிடமும் மனநோய் மருத்துவரிடமும் அனுமதித்து அவர் தொடர்பான அறிக்கைகளைப் பெறுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# காணாமல் போனோருக்கான பணியகம் 2018இல் தான் முழுமையாக செயற்படும்

## ஐ.நாவில் இலங்கை அரசு தகவல்

(கொழும்பு)

காணாமல் போனோருக்கான பணியகம் அடுத்த ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியிலேயே முழு அளவில் செயற்படத் தொடங்கும் என நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் மனோ தித்வெல தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா அமைதியை கட்டியெழுப்பும் ஆணையத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் பணியகத்துக்கான ஆணையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால எல்லை முடிந்து 10 நாட்களாகி விட்டன.

ஆணையாளர் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்கான நேர்காணலை அரசியலமைப்புச் சபை விரைவில் நடத்தும்.

உண்மை கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்கும் சட்டத்தின் வரைவும் தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், நிபுணர்களுடன் மேலதிக கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

அனைத்துலக நடைமுறை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகளின் அடிப்படையில் சிவில் சமூக குழுவே இதனைத் தயாரித்துள்ளது. உண்மைஆணைக்குழு, பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் தொடர்பான, அனைத்துலக நிபுணர்களின் அனுபவங்கள் எமக்கு உதவியாக உள்ளன.

2017ஆம் ஆண்டு இலங்கை மிகவும் மெதுவான ஆனால் உறுதியான நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. பெரும்பாலான முன்னேற்றங்கள் கண்களால் பார்க்க முடியாதவை என தெரிவித்துள்ளார். (இ-7)

## பேராதனை பல்கலைக்கழகம் சிங்கப்பூர் பல்கலைக்கழகமொன்றுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் சிங்கப்பூரின் நேண்யன் பல்கலைக்கழகத்திற்குமிடையில் நீர் சுத்திகரிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் உபுல் பி திசாநாயக்க மற்றும் நேண்யன் பல்கலைக்கழகத்தின் நிர்வாக பணிப்பாளர் அடில் டஹல்லா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

குறித்த 3 வருட திட்டமானது இம்முறை குருநாகல் குளத்தை அண்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் நேண்யன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கண்டி தலதா மாளிகையின் கழிவு நீர் அமைப்பு மற்றும் கண்டி மஹாமாய கல்லூரியை சுற்றியுள்ள பிரதேசத்தை சூழல் அறிவை பெரும் பிரதேசமாக மாற்றியமைக்க "ASEAN" சிறந்த பொறியியலாளர் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டமைக்கான கொண்டாட்டமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கோண்டாவில் றோ.க.த.க பாடசாலைக்கு பழைய மாணவர் கு.நேசகுமார் குடும்பத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வாகனத்தரிப்பு திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

## சீமெந்து பக்கெற் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ் 2017ஆம் ஆண்டு தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சி கரவெட்டி கரணவாயைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழுள்ள இரண்டு குடும்பங்களுக்கு தலா 20 பக்கெற்று சீமெந்து அண்மையில் வழங்கினார். (இ-60)

# அத்தி







தமிழ்ப்பெயர் :- அத்தி

தாவரப்பெயர்:- FICUS GLOMERATA(பிகஸ் க்ளோமெராடா)

குடும்பம்:- MORACEAE

வகைகள்:- சீமைஅத்தி, வெள்ளைஅத்தி, ஆப்கான் அத்தி, நாட்டுஅத்தி

பயன்தரும் பாகங்கள்

இலை, பிஞ்சு, காய், பழம், பால், பட்டை

தோற்றம்

இம்மரமானது தென் கிழக்காசியாவை தாயகமாகக் கொண்டது. தற்போது உலகில் இலங்கை, இந்தியா, கிரீஸ், அல்ஜீரியா, சிரியா, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளில் காணப்படுகின்றது.

இனப்பெருக்கமுறை

அத்தி மரமானது வெட்டுத்துண்டங்கள், காற்றுப்பதி, ஒட்டுதல் போன்ற செயன்முறைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது

நடுகைமுறை

அத்தியானது அனைத்து வகையான நிலங்களிலும் வளரக்கூடியது. ஆனாலும் உவர்நிலங்கள் இச் செய்கைக்கு ஏற்றதல்ல. களிநிலம் மற்றும் ஆற்றுப்படுக்கைகளில் சிறப்பாக வளரும் தன்மை கொண்டது. இது வறட்சியை தாங்கி வளரக்கூடியது.

பயன் தரும் காலம்

25 வருட ஆயுட்காலத்தைக் கொண்டது. நாட்டு அத்தியானது நட்டு மூன்றாவது ஆண்டிலிருந்து பலனை தரக்கூடியது. 3000 பழங்கள்/மரம்/ஆண்டு என்றவாறு அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

போசணைப் பெறுமானம்

பயன்பாடு

கண்களின் பார்வையைக் கூட்டும் விற்றமின் ஏ, நிக்கோடினிக் அமிலம், அஸ்கோபிக் அமிலம் போன்றவை அத்திப்பழத்தில் பெருமளவில் அடங்கியிருக்கின்றன. மற்றபழங்களைக் காட்டிலும் அத்திப்பழத்தில் 2 முதல் 4 மடங்கு அதிகமாகதாது உப்புகளும், சத்துப்பொருட்களும் அடங்கியிருக்கின்றன. இரும்புச்சத்து அத்திப்பழத்தில் அதிகமாக இருப்பதால், இதைத்தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு இரத்தச் சோகை நோய் வராது. இரத்த உற்பத்தி அதிகரித்து, நோய் எதிர்ப்பாற்றலும் உடலில் அதிகரிக்கும்.

இலைகளை உலரவைத்து பவுடராக்கி தேனில் கலந்து சாப்பிட்டால், பித்தம், பித்தத்தால் வரும் நோய்கள் குணம் பெறுகின்றன.

மரத்தின் பட்டையை இரவில் உலர வைத்து, காலையில் குடிநீராகக் குடித்தால் வாதநோய், மூட்டு வலிகள் குணப்படும். புண்களைக் கழுவ வெளி மருந்தாக பயன்படுத்தலாம்.

அத்திப்பழம், அத்திப்பிஞ்சு, அத்திக்காய் மூன்றையும் சமைத்துச் சாப்பிடுவதன் மூலம் சிறுநீரக நோய்களைக் குணப்படுத்த முடியும்.

தினசரி 2 பழங்களைச் சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும். கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப் பழங்களை வினாகிரியில் ஒருவாரம் வரை ஊறவைத்து அதனைத் தினமும் இரண்டு பழங்கள் வீதம் ஒரு வேளை சாப்பிடலாம்.

ஆஸ்துமா, வலிப்புநோய், உடல் உளைச்சல், சோர்வு, அசதி, இளைப்பு போன்றவற்றை நீக்கவும் அத்திப்பழம் மிகச்சிறந்த பலன் தருகிறது.

### 100 கிராம் அத்திப்பழத்தில் அடங்கியுள்ள போசணைக் கூறுகளும் அதன் பெறுமானங்களும்

| இல | போசணைக்கூறுகள் | போசணைப்பெறுமானங்கள் |
|---|---|---|
| 1 | நீர் | 12.6% |
| 2 | காபோவைதரேற் | 49% |
| 3 | புரதம் | 7.4% |
| 4 | கொழுப்பு | 5.6% |
| 5 | கனிப்பொருள் | 7.5% |
| 6 | நார்ப்பொருள் | 17.9% |

**அ.விஜிதா.** குலாஸ்
பாடவிடய உத்தியோகத்தர் பிரதிமாகாண விவசாயத் திணைக்களம், மன்னார்

# ரணில் நாடு திரும்பியதும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அதிரடி மாற்றங்கள்

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர்பதவி நிலைகளில், முழுமையான மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அரசாங்கத் தரப்பினரும் ஆளும் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாகவே அரசாங்கம் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.



அந்தத் தரப்பினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ,ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தெளிவுபடுத்தியதன் பயனாகவே இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாரிய அதிகாரப் போராட்டத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்ற சட்டமா அதிபர் திணைக்களத்தில் உயர்நிலை பதவிகளில் இருக்கின்ற சிலர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசிகள். அவ்வாறானவர்கள் அந்த உயர் பதவிகளிலேயே இன்னுமிருக்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆட்சியில் இருக்கும் அரசாங்கம், மனிதப்படுகொலைகள், ஊழல் மோசடி மற்றும் துஷ்பிரயோகம் ஆகியன தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வேண்டுமென்றே காலம் தாழ்த்துவதாக அத்தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

அத்தரப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை உதாரணம் காட்டியே மேற்படி குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததாகவும் அறியமுடிகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஆஜராகுவதற்கு அவருக்கு நீண்ட இடைவெளிக்கு அப்பால் திகதியொன்று வழங்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து அந்தத் தரப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிக்கையொன்றைக் கையளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கவனத்தில் கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பதவிநிலைகளை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்தப் பிரிவினர் பிரதமரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த இந்தத் தரப்பினர், மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பிலான வழக்குகளைத் துரிதப்படுத்தி விசாரணைகளை முன்னெடுத்து நிறைவுக்குக் கொண்டு வருவதற்கு விசேட நீதிமன்றமொன்றை நிறுவுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆளும் தரப்பின் அமைச்சர்கள் மற்றும் ஆளும் தரப்பு பின்வரிசை எம்.பிக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த மாற்றங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் இந்த மாற்றங்கள் நிகழுமென்றும் அந்தத் தகவல் மூலம் மேலும் அறிய முடிந்தது. (இ-7)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ். மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம், பருத்தித்துறை மற்றும் தெல்லிப்பழை தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகள் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இவை மூன்று, ஆறு மற்றும் ஒரு வருடப் பயிற்சிக் காலத்தைக் கொண்டது. இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக் கற்கை நெறிகளை முழுமையாக பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 30.11. 2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-7)



சாவகச்சேரி அ.த.க. பாடசாலைக்கு தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தினால் கணனிப்பொறித் தொகுதி கையளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் தென்மராட்சி பிரான்ஸ் கிளையின் போசகர் பரமானந்தம் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் கந்தசாமி, செயலாளர் ஜெயக்குமார், இணைப்பாளர் அரசநாதன், தென்மராட்சி கல்வி வலயத்தின் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கதிர்காமநாதன் மற்றும் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# ஜனாதிபதி 28ஆம் திகதி தென்கொரியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 28ஆம் திகதி தென்கொரியாவிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜா-இன்னின் விசேட அழைப்பின் பேரில் மூன்று நாள் பயணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்கொரியாவிற்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

தென்கொரியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இந்த பயணம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.


எதிர்வரும் 29ஆம் திகதி தென்கொரிய ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ள ஜனாதிபதிக்கு அன்றிரவு தென்கொரிய ஜனாதிபதியால் அரசுமுறை விருந்துபசாரம் வழங்கப்படவுள்ளது.

குறித்த சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1257

Search for people, places and things


### தேவ்




### கபில்




### சியா




### அருண்




### அபி

உலகின் மிகப் பெரிய இரண்டு பொய்கள்

ஆண்கள்: என் வீட்டுக்காரியை கேட்க வேண்டிய அவசியமில்லை. என்னோட டிஸிஷன்தான் பைனல்

பெண்கள்: என் வீட்டுக்காரரைக் கேட்டுவிட்டு சொல்றேன். அவரைக் கேட்காமல் எதுவுமே செய்யமாட்டேன்

### அருள்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்து மொத்தம் 19 தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யவேண்டியுள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டுத் தொகுதிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் இரு தொகுதிகளும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா மூன்று தொகுதிகளும் நிர்ணயிக்க வேண்டும். வடமாகாண சபைத் தேர்தலின் பொருட்டு தொகுதி நிர்ணயம் செய்யும் செயற்பாட்டில் மாகாணம் தழுவிய நிலைப்பாடுகள் எடுக்கப்படாது ஒவ்வொரு மாவட்டம் தழுவிய நிலைப்பாடுகளே அடிப்படையாகக் கொள்ளப்படும். 1000 சதுர மைலுக்கு ஒரு அங்கத்தவர் என்றும் 40000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர் என்றும் மாவட்ட நிலப்பரப்புக்கும் மக்கள் தொகைக்கும் ஏற்ப அங்கத்தவர் எண்ணிக்கை கணிக்கப்பட்டது. இவ்வாறு கணிக்கப்படும் போது வரும் எச்சங்கள் அரைவாசிப் பெறுமானத்திற்கு மேல் இருக்குமிடத்து அவற்றை முழுமையாகக் கொண்டு அங்கத்தவர் எண்ணிக்கை ஒதுக்கப்பட்டுள்ளது. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் குறைந்த மக்கள் தொகையைக் கொண்டிருந்தபோதும் விசாலமான நிலப்பரப்பினால் ஒப்பீட்டு ரீதியில் அவை கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளன.

மாவட்ட அடிப்படையில் தொகுதிகள் நிர்ணயம் செய்த பொழுது மக்கள் தொகை, இனவிகிதாசாரம், மதவிகிதாசாரம், வளர்ந்த, வளரும் சமூக, சமுதாயப் பிரிவுகள், குழுமங்கள், புவியியற் காரணிகள், கிராம-நகர வேறுபாடுகள், உள்ளூர் வரலாறு, பிராந்திய அடையாளம் போன்ற காரணிகள் கவனத்திற் கொள்ளப்பட்டன. மேலும் தொகுதிகளுக்குப் பெயர் தெரிவு செய்த பொழுது முன்னர் இருந்த தொகுதிகளின் பெயர்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கிராம/ நகரப் பெயர்கள், பிராந்திய அபிவிருத்தியை முன்னெடுக்கக் கூடிய இடப்பெயர்வுகள், பிராந்திய அடையாளத்தைக் கொடுக்கக்கூடிய இடப்பெயர்வுகள் தெரிவு செய்யப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2012 இல் 583,882 மக்கள் இருந்துள்ளனர். இவர்களுள் 99.9 வீதம் தமிழர்களாவர். சமய ரீதியில் இந்துக்கள் 82.77 வீதமாகவும் றோமன் கத்தோலிக்கர்களும் ஏனைய கிறிஸ்தவர்களும் 16.44 வீதமாகவும் இருந்துள்ளனர். சமூக- சமுதாயக் குழுமங்கள் இருப்பினும் அவர்களுடைய குடித்தொகை விபரங்கள் பெறமுடியாதுள்ளது. கரையோரப் பகுதிகளில் செறிந்து வாழும் மீனவ சமூகத்தில் குறிப்பிடத்தக்க விகிதத்தினர் றோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்களாவர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுப் பகுதிகள், பெரிய யாழ்ப்பா ணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய தனித்துவமான புவியியற் பிரதேசங்களில் வாழும் மக்கள் பிராந்திய அடையாளத்துடன் தமக்கேயுரிய கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டுள்ளனர். இப்பிரதேசங்கள் முழுவதும் மாண நிலையில் யாழ்ப்பாணப் பண்பாட்டைக் கொண்டனவாக இருப்பினும் இடைநிலையில் இவை தத்தமக்குரிய உப கலாசாரங்களைக் கொண்டனவாக உள்ளன. இதனால் இப்பிராந்திய அடையாளங்களுக்கு முடிந்தவரை இடங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1947-1960 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய ஏழு பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகள் இருந்தன. 1960-1989 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூரர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், காங்கேசன் துறை, கோப்பாய் சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய பதினொரு பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகள் இருந்தன. 1989 இற்குப் பின்னர் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்டங்கள் இலக்கம் 10 யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியாக மாற்றப்பட்டன. புதிய தேர்தல் முறையில் தெளிவான அங்கத்தவர்கள் தாங்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டங்களின் பிரதிநிதிகளைக் கூறினும் தங்களை முன்னைய தொகுதிகளுடன் இணைத்து அடையாளப்படுத்துகின்றனர். முன்னைய பாராளுமன்றத் தொகுதிகள் இல்லாது போனாலும் பழைய தொகுதிகளுடன் மக்கள் தம்மை இன்றும் அடையாளப்படுத்துகின்றனர். இதனால் பழைய தொகுதிகளின் பெயர்களையும் வைக்க வேண்டிய தேவை இருந்தது.

நாடு தழுவிய நிலையில் மாகாணத் தேர்தல் தொகுதி நிர்ணயம் 2012 ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் மக்கள் தொகை/ குடித்தொகை விபரங்கள் யாவும் 2012 ஆம் ஆண்டுக்குரியன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகை 583,882 பேராக இருந்தது. இம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை எட்டாகும். இம்மாவட்டத்தில் சராசரியாக ஒரு தேர்தல் தொகுதிக்குரிய குடித்தொகை 72985 ஆகும். மாகாணத் தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு ஒரு மாவட்டத்திற்குள் தொகுதிக்கு தொகுதி மக்கள் தொகை சராசரி மக்கள் தொகையிலிருந்து +10 வீதத்திற்கு மேல் அல்லது -10 வீதத்திற்குக் கீழ் செல்லாமல் இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தொகுதி யொன்றின் சராசரி மக்கள் தொகையின் +10 வீத அளவு 80283, -10 வீத அளவு 68686 ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் எட்டுத் தேர்தல் தொகுதிகள் அடையாளம் செய்யப்பட்டுள்ளன.

1.தீவுகளும் யாழ்ப்பாணமும்
2.நல்லூரர்
3.வட்டுக்கோட்டை
4.கோப்பாய்- மானிப்பாய்
5.காங்கேசன்துறை
6.உடுப்பிட்டி- அச்சுவேலி
7.சாவகச்சேரி
8.பருத்தித்துறை

### தீவுகளும் யாழ்ப்பாணமும் தேர்தல் தொகுதி

தீவுகள் 1931-1947 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஊர்காவற்றுறை




பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

தொகுதிக்குள் தீவுகள் இருந்ததுடன் இன்றைய வலிகாமம் மேற்குப் பிரிவும் வலிகாமம் தென்மேற்குப் பிரிவும் இருந்தன. 1947 இல் புதிதாக உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் தொகுதிக்குள் காரைநகர் உட்பட எல்லாத் தீவுகளும் அடங்கியிருந்தன.

1960 இல் உருவாக்கப்பட்ட ஊர்காவற்றுறைத் தொகுதி காரைநகர் தவிர்ந்த ஏனைய தீவுகள் யாவற்றையும் கொண்டிருந்தது. 1931 ஆம் ஆண் டிலிருந்து தீவுப் பகுதிகள் ஊர்காவற்றுறைத் தொகுதியைப் பெற்றிருந்தன.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் 1991 இல் புங்குடுதீவு, வேலணைத்தீவு, காரைநகர், மண்டைதீவு ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்குட்பட்டனர். ஐந்து வருடங்கள் மக்களற்ற பகுதிகளாக இருந்ததால் இப்பகுதிகள் பெரு அழிவுக்குட்பட்டன. மக்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டனர். இன்று இப்பகுதிகளில் 40018 பேர் இருக்கின்றனர். (நெடுந்தீவு 3824, தீவுகள் தெற்கு 16742, தீவுகள் வடக்கு 9876, காரைநகர் 9576).(தொடரும்)



# தலைவர் பிரபாகரனை விட சம்பந்தன் ஆபத்தானவர்

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை விடவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆபத்தானவர் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

மாத்தளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். வேலுப்பிள்ளை பிரபாகரனை விடவும், சம்பந்தன் ஆபத்தானவர். உத்தேச அரசியல் அமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் லாம்பு, குடம் விளையாட்டே நடைபெறும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் தேர்தலை ஒத்தி வைப்பதற்காக லாம்பு மற்றும் குடம் சின்னங்களைக் கொண்ட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வெற்றியீட்டியது.

லாம்பிற்கு கூடுதல் வாக்கு அளிக்கப்பட்டால் நாடு பிளவடைவதனை தடுக்க முடியாது.

உத்தேச அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டால் தமிழ், சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இடையில் நல்லிணக்கம் நீடிக்காது. அண்மையில் ஸ்பெயின் மக்கள் எதிர்நோக்கிய அனுபவங்களை இலங்கையும் எதிர்நோக்க நேரிடும்.

ஒருமித்த நாடு என்ற பதம் ஒருமைப்படுத்திய நாடு என்ற தமிழ் அர்த்தத்தை கொண்டதாகும்.

சமஷ்டியை வழங்கினால் பின்னர் சமஷ்டி வழங்கப்பட்ட பகுதி விரும்பினால் மட்டுமே மீளவும் இணைந்து கொள்ள முடியும்.

உத்தேச அரசியல் அமைப்பு அமுல்படுத்தப்பட்டால் நோர்வே அரசாங்கம் நேரடியாகவே மாகாணங்களுக்கு ஆயுதங்களை வழங்கக்கூடிய பின்னணி உருவாகும் என உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## சின்னையாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி நல்லாட்சி அரசின் போலி முகம் அம்பலம்

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமவன் ரணசிங்கவின் சேவை காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 19 திகதியுடன் கடற்படை தளபதி வைஸ் அட்மிரால் சிறிமேவன் ரணசிங்க 55ஆவது வயதினை அடைந்துள்ளார். இந்நிலை யில், அவருக்கான சேவை நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்படையின் 22ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரால் சிறிமேவன் ரணசிங்க, கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி பதவியேற்றிருந்தார்.

இந்நிலையில், இவருக்கு தற்போது 6 மாதகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், இந்த விடயம் தற்போது விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஏனெனில், இலங்கை வரலாற்றில் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை கடற்படையின் தளபதியாக தமிழர் ஒருவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

50 ஆண்டுகளுக்குப் பின்னர் கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்ட தமிழரான ட்ரவிஸ் சின்னையா வெறும் 64 நாட்கள் மட்டுமே அந்த பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார்.

ட்ரவிஸ் சின்னையா கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு அவரது 55ஆவது வயது பூர்த்தி காரணமாக கடந்த செப்டெம்பர் 23ஆம் திகதியளவில் பதவியில் இருந்து ஓய்வுபெறும் நிலையில் இருந்தார்.

இதனையடுத்து, ட்ரவிஸ் சின்னையாவின் பதவி காலம் மேலும் ஒரு மாதத்திற்கு மட்டுமே நீடிக்கப்பட்டது.




ட்ரவிஸ் சின்னையாவிற்கு முன்னர் கடற்படை தளபதியாக இருந்தவர்களின் சேவை நீடிப்பு என்பது மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் ஏன் வருடக்கணக்கில் கூட நீடிக்கப்பட்டிருந்தது.

எனினும், ட்ரவிஸ் சின்னையாவின் பதவி காலம் மட்டும் வெறுமனே ஒரு மாதத்திற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்தது. முன்னாள் கடற்படைத் தளபதி ட்ரவிஸ் சின்னையாவிற்கு ஏன் சேவை நீடிப்பு வழங்கப்படவில்லை என்பதற்கு அரசாங்க தரப்பில் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டிருந்தன.

அந்த வகையில், ஏனையோருக்கும் கடற்படைத் தளபதியாக பதவி வகிக்க சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் இவ்வாறு சின்னையாவின் சேவைக் காலம் நீடிக்கப்படவில்லை என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

குறிப்பாக, "கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ட்ரவிஸ் சின்னையாவின் பதவிக் காலத்தை இரண்டு மாதங்களுக்கு வரையறுக்க நேரிட்டது.

அவருக்கு அடுத்தபடியாக பதவி வகிப்போருக்கும் கடற்படை தளபதியாக பதவி வகிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே, சின்னையா ஓய்வுறுத்தப்பட்டார்.

கடற்படைத் தளபதியாக பதவி வகிக்க வேண்டிய, போரில் பாரியளவு சேவைகளை வழங்கிய மேலும் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் கடற்படையில் சேவையாற்றி வருகின்றனர்.

சின்னையாவிற்கு ஓராண்டு கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தால் ஏனையவர்களுக்கு கடற்படைத் தளபதியாக பதவி வகிக்க சந்தர்ப்பம் கிட்டியிருக்காது என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேலும் பலர் கடற்படை தளபதியாக பதவி வகிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்என தெரிவித்து இரண்டே மாதங்களில் ட்ரவிஸ் சின்னையா நீக்கம் செய்யப்பட்டு புதிய கடற்படை தளபதி நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது, புதிய கடற்படை தளபதியின் பதவிக்காலம் நிறைவடையும் நிலையில் அவருக்கு மேலும் ஆறு மாத காலம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமையானது தமிழரான ட்ரவிஸ் சின்னையாவுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே பார்க்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது நல்லாட்சி அரசாங்கத்தின் போலி முகத்தை வெளிப்படையாக காட்டியிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## மகிந்த அரசாங்கம் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர்களில் ஒருவர் என்ற வகையில், தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டமை எனக்குத் தெரியும்.

சட்டத்தேவைகளின் அடிப்படையில் மட்டுமே தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க முடியும். அவ்வாறு இல்லையென்றால் அது தனி மனித உரிமைகளை மீறும் செயலாகும் என அமைச்சர் திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பிணைமுறி விவகாரத்தை மூடி மறைக்க ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவர் கைதாகலாம்

## அரசு மீது பந்துல சந்தேகம்

(கொழும்பு)

தன் மீது சுமத்தப்படும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க, ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவரேனும் ஒருவரை விரைவில் கைது செய்ய நல்லாட்சி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிரணி சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிணைமுறி விவகாரம் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் அரசிடம் நாம் இரண்டு கோரிக்கைகளை விடுக்கிறோம்.

ஒன்று, பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட உடனேயே அதன் முழுமையான நகல் ஒன்று சபாநாயகருக்கு கையளிக்கப்பட வேண்டும். இரண்டாவது, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அது குறித்த சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக நடத்தி முடித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். இவ்விரு கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம்.

பிணைமுறி விவ்காரத்தில் அரசு தொடர்ச்சியாக கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது. இவ்விவகாரம் மீதான அவதானத்தை திசை திருப்புவதற்காக, மிக விரைவில் ராஜபக்ஷ குடும்பத்தில் எவரேனும் ஒருவரைக் கைது செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்படி, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ அல்லது பசில் ராஜபக்ஷ என்று யாரேனும் ஒருவரை கைது செய்யுமாறும் அவருக்கு பிணை வழங்காது சிறையில் அடைத்து வைக்க வேண்டும் என்றும் அரசு திட்டமிட்டுள்ளதென பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (இ-7)




# தந்தை சொன்ன சொல்

ஒரு ஊரில் கோவிந்தன் என்ற குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். தினமும் காலையிலேயே எழுந்து இறைவனைத் துதித்து விட்டு வெகு தொலைவு சென்று மண் அள்ளி வருவான். வீடு திரும்பி அந்த மண்ணைப் பிசைந்து பானைகள் செய்து அவற்றை விற்றுப் பிழைத்து வந்தான்.

அவனுக்கு ஒரே மகன் மணிவண்ணன். அவனோ எந்த வேலையோ அப்பாவுக்கு உதவியோ எதுவும் செய்யாது ஊரைச் சுற்றி வந்தான். அது மட்டுமல்லாமல் எது சொன்னாலும் அதற்கு எதிர் மறையான சொல்லையே சொல்வான். செய்யவும் செய்வான். இவனைப் பற்றிய கவலையில் எப்போதும் வருத்தத்தோடு இருந்தான் கோவிந்தன்.

ஒருநாள் மழை வரும் போல இருந்ததால் தன் மகனை அழைத்தான். "மணிவண்ணா, இந்த மண்ணைக் காலால் மிதித்து பிசைந்து வையடா". "என்னால் முடியாது" "குடியானவக் குடும்பத்திலே பிறந்தவனுக்கு இது கூடவா தெரியாது?" "இல்லை. தெரியாது" "ஏன்டா இப்படி எது சொன்னாலும் தெரியாது என்கிறாய். தெரியும் என்று சொன்னால்தான் உன் வாழ்க்கை சிறப்பாக இருக்குமே! அதையாவது செய்".

மணிவண்ணன் சிந்தித்தான். அப்பாவுக்குத் திருப்தியைக் கொடுப்போமே என்று தோன்றிற்றோ என்னவோ "சரி அப்பா இனி எல்லாம் தெரியும் என்றே சொல்கிறேன்".

அப்பாவுடன் சேர்ந்து உணவு உண்டு விட்டு வழக்கம் போல ஊர் சுற்றக் கிளம்பினான் மணிவண்ணன். அவனைப் போல் இன்னும் இரண்டு நண்பர்கள் அவனுடன் காட்டுவெளியில் அமர்ந்தனர். சற்று நேரத்தில் அரசாங்க காவலர்கள் இரண்டு திருடர்களைத் துரத்திப் பிடித்தனர். அவர்களோடு மணிவண்ணனையும் சேர்த்துப் பிடித்துச் சென்றனர். மன்னன் முன் நிறுத்தினர்.



"அரசே, இவர்கள் திருடுவதற்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். நாங்கள் சந்தேகப்பட்டுத் திருடர்களைப் பிடித்து வந்துள்ளோம். அவர்களுக்குப் பின்னாலிருந்த புதர் நிழலில் இவர் அமர்ந்திருந்தார். இவர்தான் சரியான சாட்சி" என்று மணிவண்ணனைக் கைகாட்டினர் சேவகர். அரசர் அமைச்சரிடம் விசாரிக்கச் சொன்னார். ஏனோ கலவரமடைந்திருந்த அமைச்சர் "உண்மையைச் சொல் இவர்கள் திட்டமிட்டது உனக்குத் தெரியுமா?" மணிவண்ணன் தன் அப்பாவின் முன் தான் செய்த முடிவு அவனுக்கு நினைவு வந்தது. சட்டென "எல்லாம் தெரியும்" என்றான். அமைச்சர் மேலும் கலவரமடைந்தார். "இவர்களின் முழுத்திட்டமும் தெரியுமா?" "எல்லாம் தெரியும்" "இவர்களைத் தூண்டியது யாரென உனக்குத் தெரியுமா?" "எல்லாம் தெரியும்" உடனே அந்தத் திருடர்கள் தங்களின் இரகசியமெல்லாம் தெரிந்தவர் மன்னனிடம் உண்மையை கூறினால் தலை போய் விடும் எனத் தெரிந்து கொண்டு தாங்களாகவே உண்மையை ஒப்புக் கொண்டு மன்னிப்பும் கேட்டுவிட முடிவு செய்தனர்.

"மகாராஜா. அரண்மனை பொக்கிஷ அறையில் உள்ள பொக்கிஷத்தைக் கொள்ளையடித்து வரும்படி அமைச்சர் அவர்கள்தான் திட்டம் தீட்டி எங்களுக்குக் கட்டளையும் இட்டார்.

அமைச்சரே துணை யிருக்கிறாரே எங்களுக்கு எந்த அச்சமும் இல்லையென்று தான் நாங்களும் அரண்மனையில் திருடச் சம்மதித்தோம். நாங்கள் பேசிக் கொண்டதை மறைவில் இருந்து இவர் கேட்பார் என்று நாங்கள் நினைக்கவில்லை. எங்களை மன்னித்து விடுங்கள் மகாராஜா"

மன்னர் கோபத்தின் உச்சத்தில் இருந்தார்.

(தொடரும்)

# இன்றைய நாளில் முன்னைய பதிவுகள்

11.2017 23

❖1903- அல்பேனிய எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖1940- இரண்டாம் உலகப் போர்: இத்தாலியரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கிரேக்கப் படைகள் அல்பேனியாவுக்குள் நுழைந்து கோரிட்சாவை விடுவித்தனர்.

❖1942- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய தளபதி பிரீட்றிக் பவுலஸ், ஸ்டாலின்கிராட்டில் தாம் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக ஹிட்லருக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பினான்.

❖1943- இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், சீனத் தலைவர் சியாங் காய்-செக் ஆகியோர் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சந்தித்தனர்.

❖1956- ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மெல்பேர்னில் ஆரம்பமாயின.

❖1965- இந்தோனேசியாவின் கம்யூனிஸ்த் தலைவர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

❖2002- நைஜீரியாவில் உலக அழகிப் போட்டியாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

❖2005-ஜேர்மனியின் முதலாவது பெண் ஜனாதிபதி (சான்சிலர்) ஏங்சலா மேர்க்கெல் தெரிவு செய்யப்பட்டார்.

❖2007- இலங்கை அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தடை விதித்தது.

## பிறப்புகள்

❖1958- ஜேமி லீ குர்திஸ், அமெரிக்க நடிகை

❖1967- பொறிஸ் பெக்கர், செருமானிய-சுவிஸ் டென்னிஸ் வீரர்

❖1967- மார்க் ருஃப்பால்லோ, அமெரிக்க நடிகர்

❖1968- ரஸ்மஸ் லெர்டெர்ஃப், பி.எச்.பி நிரல் மொழியைக் கண்டுபிடித்தவர்

❖1969- மர்ஜானே சத்ரபி, ஈரானிய எழுத்தாளர்

❖1970- மாவன் அத்தபத்து, இலங்கைத் துடுப்பாளர்

❖1984- ஸ்கார்லெட் ஜோஹான்சன், அமெரிக்க நடிகை

❖ 1986-ஆஸ்கர் பிஸ்டோரியஸ், தென்னாபிரிக்க ஓட்டப்பந்தய வீரர்

## இறப்புகள்

❖1774- ராபர்ட் கிளைவ், ஆங்கிலேய இராணுவ வீரர், அரசியல்வாதி (பி. 1725)

❖1963- ஜான் எஃப். கென்னடி, அமெரிக்காவின் 35வது அரசுத்தலைவர் (பி. 1917)

❖ 1997-தி. சதாசிவம், தமிழகப் பத்திரிகையாளர், திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1902)

❖2011- சுவெத்லானா அலிலூயேவா, ரஷ்ய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1926)

❖2011- லின் மர்குலிஸ், அமெரிக்க உயிரியலாளர் (பி. 1938)

❖2012- பி. கோவிந்த பிள்ளை, இந்திய அரசியல்வாதி (பி. 1926)

❖ 2015-சலாகுதீன் காதர் சௌத்ரி,

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 180 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 60 | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 700 | 800 | 800 |
| தக்காளி | 100 | 100 | 120 | 220 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 20 | 50 | 60 | 40 |
| கோவா | 150 | 200 | 160 | 200 | 200 |
| கரட் | 180 | 200 | 240 | 180 | 280 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 120 | 100 | 160 | 80 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 140 | 130 | 160 |
| பாகற்காய் | 350 | 600 | 400 | 320 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | 80 | 70 | 80 |
| பயற்றங்காய் | 180 | 200 | 240 | 220 | 200 |
| லீக்ஸ் | 140 | 250 | 240 | 220 | 160 |
| பீற்றூட் | 150 | 150 | 160 | 130 | 160 |
| கறிமிளகாய் | 90 | 200 | 320 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 240 | 100 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | – | 140 |
| கீரை – 1பிடி | 60 | 50 | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 100 | 50 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 80 | 60-100 |
| இராசவள்ளி | – | – | – | – | – |
| வெங்காயப்பூ | 300 | – | – | – | 240 |
| முள்ளங்கி | 100 | – | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 50 | – | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | – | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | – | 100 | 60 | 100 |

பதவி பூவைப் போன்றது. பூவின் வாசனையை நுகரலாம். பூவையே சாப்பிடக் கூடாது.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

# அரசியல் கடைக்கும் எதிர்க்கடை தேவை

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை தேவை என்பது நம் முன்னோர்களின் முடிவு. இந்தக் கருத்துக்குள் ஆழமான பொருளியல் சிந்தனை இருப்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

சந்தையமைப்பில் கேள்வி நிரம்பல்களே பொருட்களின் விலைகளை தீர்மானிக்கின்ற பிரதான காரணியாகும்.

வேறு சில காரணிகளும் பொருட்களின் விலைகளைத் தீர்மானிக்கின்றனவாயினும் அவை எத்தகைய சந்தைமுறைக்குட்பட்ட பொருட்கள் என்பதைப் பொறுத்து விலை நிர்ணயித்தல் அவற்றின் வகிபாகம் அமையும்.

உதாரணத்துக்கு தனியுரிமைச் சந்தையில் உற்பத்தியாளர் தீர்மானிப்பதே விலை என்றாகி விடுகிறது.

ஆக, தனியுரிமை அல்லது ஏகபோக உரிமை கொண்ட பொருட்களில் நுகர்வோர் வாய் பொத்தி நின்று நிர்ணயித்த விலையில் பொருளைக் கொள்வனவு செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்றாகி விடுகின்றது.

ஆதலால் தனியுரிமை என்ற சந்தை அமைப்பு விரும்பத்தக்கதன்று.

இங்கு நுகர்வோரின் நலன் கருத்திற் கொள்ளப்படாமல் தனித்து உற்பத்தியாளரின் உச்ச இலாபமே முதன்மை பெறுகின்றது. அத்துடன் தரமற்ற பொருட்களின் உற்பத்தியும் நடந்தேறுகின்றது.

இத்தகைய கேடுகளால்தான் போட்டிச் சந்தை இருக்க வேண்டும் என்ற கொள்கை முன்னெழுகின்றது.

போட்டிச் சந்தை இருக்குமாயின் அங்கு கேள்வி நிரம்பல் என்பவற்றினால் விலை தீர்மானிக்கப்படுவதுடன் குறைந்த விலையில் தரமான பொருள் கிடைப்பதும் உறுதி செய்யப்படும்.

இவ்வாறு கடும் போட்டியுள்ள சந்தையமைப்பு விலைக்குறைவையும் தரமான பொருளையும் பொதுமக்களுக்கு தருவதுபோல, ஏனைய விடயங்களிலும் கடும் போட்டி இருக்குமிடத்து அங்கு தீர்மானங்கள், கொள்கைகள்; நிதானமாக, நியாயமாக, நீதியாக எடுக்கப்படும்.

குறிப்பாக அரசியல் புலத்தில் பலமான அரசியல் கட்சிகள் பலமான போட்டியுடன் இருக்கும்போது அந்த அரசியல் கட்சிகளின் கொள்கைகளும் தீர்மானங்களும் நிதானமாக மக்கள் நலன்சார்ந்ததாக அமையும் என்பது உறுதி. இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களைக் கூற முடியும்.

இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – ஐக்கிய தேசியக் கட்சி, இந்தியாவில் பாரதிய ஜனதா – காங்கிரஸ், தமிழகத்தில் திமுக – அதிமுக, அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி – குடியரசுக்கட்சி, பிரித்தானியாவில் கன்செர்வேடிவ் கட்சி – லிபரல் என இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் பலமான மக்கள் ஆதரவுடன் செயற்படுவதால் அங்கு ஊழல்களும் ஏதேச்சதிகாரங்களும் சுயநலங்களும் மிக மிகக் குறைவு எனலாம்.

மாறாக எங்கள் தமிழ் மண்ணில் இத்தகையதோர் சூழ்நிலை இல்லாமல் போனதன் காரணமாக தன்னிச்சையான தீர்மானங்கள், மக்கள் நலன் பற்றிச் சிந்திக்காத செயற்பாடுகள், அதிகாரத் திமிர்த்தனங்கள், ஜனநாயக மீறல்கள் என ஏகப்பட்ட குழப்பங்கள் மலிந்து போயுள்ளன.

எனவே இத்தகைய தனியுரிமைத் தன்மையை உடைத்து பலமான – இரு பிரதான அரசியல் கட்சி கொண்ட ஓர் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

இதனை அமுலாக்கும்போது சர்வாதிகாரப் போக்குகள் சிதைந்து ஜனநாயக பண்புகள் மேலெழும்.

அவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களின் கருத்து என்ன என்ற விடயம் அதிகூடுதலாக கவனத்தில் எடுக்கப்பட எல்லாம் சரியாக அமையும்.

# இலங்கைக்கு தனியார் உயர்கல்வி தேவை; உயர்கல்வி அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

தனியார் உயர்கல்வி நாட்டிற்கு தேவை என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலபதி பாராளுமன்றத்தில் நேற்று முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வாய்மூலம் கேள்வியொன்றை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, வெளிவாரி பட்டப்படிப்பை இரத்துச் செய்ய வேண்டும் என்பதல்ல அதன் தரம் தொடர்பில் கேள்வி உண்டு.

வெளிவாரி பட்டப்படிப்பின் மூலம் குறுகிய காலத்தில் பட்டத்தை பெறுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றதா என்று கேட்க விரும்புகின்றேன் என்றார்.

இதற்கு பதிலளித்த லக்ஸ்மன் கிரியெல்ல, சுதந்திர கல்வக்கு இடமிருக்க வேண்டும்.

பொருளாதாரம் வலுவடைந்தால் பட்டமொன்று பெற்றுக்கொள்ளும் தேவை ஏற்படும். அதனை இல்லாது செய்யக்கூடாது. இருப்பினும் வெளிவாரி பட்டப்படிப்பு கற்கைநெறியின் தரம் குறைவானது.

அனைத்து பட்டதாரிகளும் அரசாங்க தொழிலையே விரும்புகின்றனர். இதனால் தனியார் துறை சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். சுதந்திர வர்த்தக வலயத்தில் ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புக்கள் உண்டு. அதற்கு எவரும் செல்வதில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாவீரர் வாரம் ஆரம்பம்

# கலாசார சீர்கேடான விடயங்களை இளையோர் தவிர்க்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரத்தில் கலாசார சீர்கேடான விடயங்களை, இளையோர் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென மாவீரர் நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக மாவீரர் துயிலுமில்லங்களை அண்மித்த பகுதிகளில் அவற்றின் புனிதத் தன்மையை கருத்தில் கொண்டு செயற்படுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் வாரம் நேற்று முன்தினம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மாவீரர் துயிலும் இல்லங்களில் எதிர்வரும் 27ஆம் திகதியன்று மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி வருகிறது. சில துயிலுமில்லங்களுக்கு அண்மையில்சுற்றுலாத்தளங்கள் அமைந்துள்ள காரணத்தினால் அங்கு வரும் இளையோர் துயிலுமில்லங்களுக்கு அருகிலும் வந்து நிற்கிறார்கள்.

குறிப்பாக சாட்டி துயிலும் இல்லத்துக்கு அண்மையில், சில கலாசார சீர்கேடுகள் இடம்பெற்றுவருகிறது. எனவே மாவீரர் நாளை கருத்தில் கொண்டு இளையோர் கலாசார பண்புடன் நடந்துகொள்ளுமாறு மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# அனுமதி அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்/வரணி மத்திய கல்லூரியில் க.பொ.த. (சா/த)- 2017 தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் 29.11.2017 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து க.பொ.த. (சா/த) தோற்றும் மாணவர்களின் பெற்றோர் சந்திப்பும் இடம்பெறும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# பெற்றோரைக் கண்டுபிடிக்க சுகாதார அமைச்சு உதவும்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த சுமார் 4000 பிள்ளைகள் நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன் மற்றும் பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் வசிப்பதாகவும் இவர்கள் தற்போது தமது பெற்றோரைத் தேடி இலங்கைக்கு வருவதால் இவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜொஹானே டொர்னேவார்ட் மற்றும் சுகாதார அமைச்சருக்குமிடையில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது சுகாதார அமைச்சர் வெளிநாட்டு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வி தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர், இலங்கைக்கு பெற்றோரைத் தேடிவரும் பிள்ளைகளுக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தின் வைத்திய பீடத்துடன் இணைந்து டீ.என்.ஏ பரிசோதனையை செய்வதற்கு வாய்ப்புவழங்கப்படும்எனத தெரிவித்துள்ளார். (இ-7)



## சத்திய தரிசனம்

## நல்லவனாக வாழ்வோம்

❖ இசைத்தட்டில் ஊசியை வைத்தால் தான் பாட்டு கேட்கிறது. சரியான அலைவரிசையில் ரேடியோவை வைத்தால் தான் இசை கேட்கிறது. கடவுளிடம் மனத்தை ஒருமுகமாகத் திருப்பி ஈடுபடுத்தினால் தான் நமக்கு ஆத்மாவின் இனிய இசை கேட்கும். இதைச் செய்வதற்கு மிக எளிய வழி பஜனையாகும். ஒவ்வொருவரும் பஜனை செய்யச் செய்ய இந்த ஈடுபாடு வலுப்படுகிறது.

❖ அதிகாலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிவரை பிரம்ம முகூர்த்த நேரமாகும். நித்திரைக்குப் பிறகு மனமும் கர்மேந்திரியங்களும் அந்த வேளையில் அமைதியாக இருக்கின்றன. அப்போது சத்வகுணம் ஓங்கி இருக்கிறது. இந்த வேளையில் சொல்லும் தியான ஸ்லோகங்களே அதிக பலன் தர முடியும். நம்மிடத்தில் அமைதியும், நம்மைச் சுற்றிஅமைதியும் நிறைந்துள்ள அந்த வேளை தான் தியானத்துக்கு மிகவும் ஏற்றது.

❖ நாக்கு கூர்மையான பற்களுக்கு இடையே கடிபடாமலும், காயம் படாமலும் மிகவும் லாவகமாகச் செயல்படுகிறது. அதுபோல் தீயசக்திகளும் தீமைகளும் மலிந்த இவ்வுலகில் நீங்கள் நல்லவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

கலாபூஷண விருதுக்கு

# 170 பேர் தெரிவு: 20 தமிழர்களே

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும33ஆவதுகலாபூஷண விருதுக்கு இந்த வருடம் 170 பேர் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அதில் 20 தமிழர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும், இது கடந்த வருடத்தைவிட மிகவும் குறைவான எண்ணிக்கையாகவுள்ளது என கலைஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் 33ஆவது கலாபூசண விருது வழங்கும்நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த விழாவிலஇம்முறைஇலங்கை முழுவதுமுள்ள 170 கலைஞர்களுக்கு கலாபூசண விருது வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வருடமும்கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடுமுழுவதிலும் உள்ள கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். ஆனால்இம்முறை இந்த நடைமுறையில் சிறு மாற்றம் செய்யப்பட்டு இந்து கலாசார அலுவல்கள்திணைகளம், முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஊடாக கலைஞர்கள் தெரிவு இடம்பெற்றுள்ளதுடன், கலைஞர்கள் தொகையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இனி வரும் காலங்களில் மூன்று ஆண்டுகளுக்குஒருமுறையே இந்த விருது வழங்கப்படும் எனவும் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 350 கலைஞர்களுக்கு விருது வழங்கப்பட்டது. அதில் 78 தமிழர்களுக்கு விருதுகள் கிடைக்கப்பெற்றது. இம்முறை 170 விருதுகள் வழங்கபபடவுள்ளபோதும் தமிழரகளுக்கான விருதுகள் 20 என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன்முஸ்லிம்கலைஞர்களுக்கு 10 விருதுகளும் இம்முறை கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சித்திரையில் பெண் பிறந்தால் கஷ்டமா?**

சித்திரையில் அச்சுவினி நட்சத்திரத்தின் முதல் இரண்டு நாழிகையில் பிறந்த பெண் மட்டும் கஷ்டப்படுவாள்.

**எந்த நட்சத்திரத்தில் குழந்தை பிறந்திருந்தால் சாந்தி செய்வது?**

அச்சுவினி 1,2 ஆம் பாதம், பரணி 2,3 ஆம் பாதம், பூசம் 2.3ஆம் பாதம், ஆயிலியம் 4 ஆம் பாதம், மகம் 1 ஆம் பாதம், உத்தரம் 1 ஆம் பாதம், அத்தம் 3 ஆம் பாதம், சித்திரை 3 ஆம் பாதம், கேட்டை 4 ஆம் பாதம், மூலம் 1,2 ஆம் பாதம். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிகிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் பம்பைமடு கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், கற்பகபுரம்கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப் படும் (இ-9)



# புதுவிளையாட்டு காட்டிய சில்வாவுக்கு இரண்டாண்டுகள் தடைவிதித்த இலங்கை

உள்ளூர் போட்டியில் வித்தியாசமாக ஆட்டமிழந்த இலங்கை வீரர் சமர சில்வாவுக்கு இரண்டாண்டு கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ளூர் கிரிக்கெட் போட்டி நடந்து வரும் நிலையில் எம்.ஏ.எஸ் யுனிசிலா மற்றும் டீ.ஜ.ய் லங்கா அணிகள் மோதின.

இதில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் முன்னாள் வீரர் சமர சில்வா. ஸ்டெம்பிற்கு முன் நின்று ஆடாமல். பவுலர் பந்து வீச அருகில் வந்தபோது ஸ்டெம் பிற்கு பின்புறம் சென்று பந்தை அடிக்க முயன்றார்.

ஆனால் பந்துவீச்சாளர் சரியாக பந்தை ஸ்டெம்பிற்கு போட்டு ஆட்டமிழக்கச் செய்தனர்.

இப்படி தேவையில்லாத முறையில் விளையாட முயன்ற சமர் சில்வா இரண்டாண்டுகள் கிரிக்கெட் விளையாட இலங்கை கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது.

இது சம்பந்தமான வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது. (கு)

# விலை உயர்ந்த கடிகாரம் கட்டும் நட்சத்திரங்கள் யார்?









இந்திய கிரிக்கெட் வீரர்கள் தங்களது விதவிதமான ஹேர்ஸ்டைல்கள். அணியும் ஆடைகள் போன்றவற்றினை அவ்வப்போது சமூகவலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வார்கள்.

இதில், விராட் கோலி தான் போடும் டாட்டுவுக்கு பெயர் போனவர். டோனி அவ்வப்போது தனது ஹேர்டைல்களை மாற்றுவார்.

அதுபோன்றே இவர்கள் அணியும் கடிகாரங்களும் பார்ப்பதற்கு மொடல்களாகவும், விலையுயர்ந்தவையாகவும் இருக்கும்.

விராட் கோலி

இவர். Panerai Luminor கடிகாரத்தினை பயன்படுத்துகிறார். இதன் விலை 6 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் ஆகும்.

உமேஷ் யாதவ்

இந்தியாவின் வேகப் பந்து வீச்சாளரான இவர், Graham Silverstone கடிகாரத்தினை அணிவார். இதன் விலை 6 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் ஆகும்.

டோனி

இவர் எப்போதும் மிகவும் அழகான கடிகாரத்தினை விரும்புவார். Audemars Piguet Royal Oak என்ற கடிகாரம் தான் இவருக்கு பிடித்தது.

இதன் விலை 26 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் ஆகும்.

சச்சின் டெண்டுல்கர்

சச்சின் டெண்டுல்கர் பயன்படுத்தும் கார் விலையுயர்வாக இருப்பது போன்று இவரது கடிகாரம் விலையுயர்ந்தது. Audemars Piguet Carbon கடிகாரம் இவருக்கு பிடித்ததாகும். இதன் விலை 1.3 கோடி ரூபாய் ஆகும்.

# அர்னால்டின் கனவு அணியில் கழற்றிவிடப்பட்ட கோலி



இலங்கை அணியின் முன்னாள் வீரரான ரஸல் அர்னால்ட்டின் கனவு அணியில் இந்திய அணி வீரர்கள் இரண்டு பேர் மற்றும் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் இரண்டு பேர் இடம் பிடித்துள்ளனர்.

தற்போது கிரிக்கெட் உலகில் அசத்தி வரும். இளம் வீரர்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரஸல் அர்னால்ட் தனது கனவு அணியை தெரிவு செய்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் தலைவரான கானே வில்லியம்சன் தான் இவருடைய அணிக்கும் தலைவர், தொடக்க வீரர்களாக அவுஸ்திரேலியாவின் வார்னர் மற்றும் தெனனாபிரிக்காவின் ஹசிம் ஆம்லா. மூன்றாவது வீரராக யாரும் எதிர்பார்க்காத இந்திய அணி வீரர் சடீஸ்வர் புஜாராவும். நான்காவது வீரராக வில்லியம்சனும். ஐந்தாவது வீரராக அவுஸ்திரேலியா அணியின் தலைவர் ஸ்மித்தையும் தெரிவு செய்துள்ளார்.

விக்கெட் கீப்பராக தென் ஆபிரிக்காவின் குயிண்டன் டிகாக் இருப்பார் எனவும் ஓல் ரவுண்டராக இங்கிலாந்து அணியின் பென் ஸ்டோக்சும், அணியில் சுழற் பந்து வீச்சாளர்களாக இலங்கை அணியின் ரங்கனே ஹெரத்தும், இந்திய அணியின் அஸ்வினும் உள்ளனர்.

வேகப்பந்து வீச்சுக்கு நியூசிலாந்து அணியின் டிரண்ட் போல்ட்டும். இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் ஆண்டர்சனும் இருப்பார்கள் என கூறியுள்ளார்.

மேலும் தற்போது உள்ள இளம் வீரர்களில் இந்திய அணியின் தலைவரான விராட் கோலி மூன்று வித போட்டிகளிலும் அசத்தி வருகிறார், ஆனால் அவர் ரஸல் அர்னால்ட்டின் கனவு அணியில் இடம் பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# மகளை மகனாக்கிய கங்குலி மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்





இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங். தனது மனைவி கீதா பஸ்ரா, மகள் ஹினாயா ஆகியோருடன் அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலில் வழிபட்டு, அந்த புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டு இருந்தார். அந்த படத்துக்கு வரவேற்பு தெரிவித்து கருத்துகளை பதிவிட்ட இந்திய முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி. 'உங்களது மகன் அழகாக இருக்கிறான் ஹர்பஜன், அவன் மீது நிறைய அன்பு செலுத்துங்கள்' என்று குறிப்பிட்டு இருந்தார்.

ஹர்பஜன்-கீதா பஸ்ரா தம்பதிக்கு என்ன குழந்தை பிறந்தது என்பது கூட தெரியாமல் கங்குலி கருத்து வெளியிட்டுள்ளாரே? என்று சிலர் விமர்சிக்க தொடங்கினர். தனது தவறை புரிந்து கொண்ட கங்குலி. உடனடியாக மறுபதிவிட்டு விளக்கம் அளித்தார். "மன்னித்து கொள்ளுங்கள் ஹர்பஜன் சிங். உங்களது மகள் அழகாக இருக்கிறாள். எனக்கு வயதாகி விட்டது அல்லவா?" என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு ஹர்பஜன்சிங், 'உங்களது ஆசீர்வாதத்துக்கு நன்றி... விரைவில் சந்திக்கிறேன்' என்று பதில் அளித்துள்ளார். (கு)



ஹொங்கொங் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டி கெவ்லோன் நகரில் நேற்று தொடங்கியது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சாய்னா நேவால்- டென்மார்க் வீராங்கனை மெட்டே போல்செுன் மோதினர்.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் சாய்னா நேவால் 21-19. 23-21 என்ற நேர் செட் கணக்கில் போராடி வென்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றார். இந்த ஆட்டம் 46 நிமிடம் நடந்தது. சாய்னா நேவால் 2-வது சுற்றில் சீனா வீராங்கனை சென் யூபெய்யுடன் மோதுகிறார். (கு)

## உள்ளூராட்சி மன்ற...

குறித்த வர்த்தமானி அறிவித்தலானது, உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிந்துரைகளை புறந்தள்ளிவிட்டு, அமைச்சர் பைசர் முஸ்தபாவின் கருத்துக்களை தாங்கி வந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டு அதற்கெதிராக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. கொழும்பு, கண்டி, ஹாலி-எல, மாத்தறை, எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆறு பேர் இந்த மனுவை தாகல் செய்திருந்தனர்.

இவ்வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியற்றதென அறிவித்து, ரத்துசெய்யுமாறு மனுதாரர்கள் கோரியிருந்த நிலையில், நேற்றைய தினம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதிப்பகுதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படுமென அரசாங்கம் கூறியிருந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆவா குழுவின் உளவாளி...

வில்லை எனவும் குறித்த இளைஞனை கைதே செய்தோம் என கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பஸ்ஸுக்காக காத்திருந்த இளைஞன் ஒருவனை வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்தி சென்றதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார். ஆவா குழுவில் சேர்ந்து இயங்குபவரும் அக் குழுவினருக்கு தகவல் வழங்குபவரும் யாழ்.நகரை அண்டிய பிறவுண் வீதியை சேர்ந்த ஜபாலசிங்கம் நிதர்சன் (வயது 17) என்பவர் பற்றி எமக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதனை தொடர்ந்து குறித்த நபரை கைது செய்வதற்கு தாம் பல தடவைகள் சென்ற போதிலும், எம்மை கண்டதும் தப்பியோடி தலைமறைவானார். அந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பஸ் நிலையத்தில் குறித்த நபர் நிற்பதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சிவில் உடையில் வான் ஒன்றில் குறித்த சந்தேக நபரை கைது செய்து கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தோம். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது ஆவா குழு பற்றிய பல தகவல்களை தெரிவித்தார்.

அதேவேளை சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றைய தினம் புதன்கிழமை அவரது வீட்டில் நடத்திய தேடுதலில், மானிப்பாய் பகுதியில் நடைபெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஒன்றும் வாள் ஒன்றினையும் மீட்டு உள்ளோம். குறித்த சந்தேகநபரிடம் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என மேலும் தெரிவித்தார்.

யாழில் மாவீரர் வார நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து குறித்த இளைஞர் வெள்ளை வானில் வந்தவர்களால் பலவந்தமாக பிடித்து சென்றமை மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

## தந்தை, மகனுக்கு...

கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்து யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி யாழ்.ஆறுகால்மடம் பகுதியில் சரத்பாவு என்பவரை அவரது மனைவியின் தந்தையும் மற்றும் இரண்டு சகோதரர்களும் இணைந்து கொலை செய்த குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கின் தீர்ப்பானது நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றில் வழங்கப்பட்டிருந்தது. இத் தீர்ப்பானது வாசிக்கப்படும் போது நீதிபதி சில விடயங்களை சுட்டிக்காட்டி இக் கொலை குற்றச்சாட்டை கொலை குற்றச்சாட்டில் இருந்து கைமோசக் கொலை குற்றத்திற்கு மாற்றியிருந்தார்.

அதாவது சம்பவ தினத்தன்று தனது மகளை மருமகன் அடித்து சித்திரவதை செய்வதாக தொலைபேசி வாயிலாக தகவல்கிடைத்தையடுத்தே தாம் அங்கு சென்று மகளை காப்பாற்ற நடவடிக்கை எடுத்த போது மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையிலேயே மருமகன் கத்திக்குத்துக்கு இலக்காகியிருந்ததாகவும், குறிக்கப்பட்ட சகோதரன் ஹெல்மட்டால் அடித்ததாகவும் எதிரிகள் தரப்பால் சாட்சியின் போது குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை மன்று கவனத்தில் எடுத்து சாட்சியங்களூடாக பரிசீலித்து இக் கொலை குற்றச்சாட்டை கைமோசக்கொலை குற்றச்சாட்டுக்கு மாற்றியுள்ளதாக நீதிபதி தெரிவித்தார். இதன்படி கைமோசக் கொலை குற்றச்சாட்டில் குற்றவாளியாக மாமனார் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் அவருக்கு ஏழாண்டு கடூழிய சிறை தண்டனையும், 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் கட்டத்தவறின் மூன்று மாத கடூழிய சிறைத் தண்டனையும், அதேபோன்று சகோதரன் ஒருவருக்கு 2ஆண்டுகால கடூழிய சிறைத் தண்டனையும் அது ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் கட்டத்தவறின் மூன்று மாத கடூழிய சிறைத் தண்டனையும் மற்றைய சகோதரனை விடுவித்தும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (ம-4)

## எந்தவித அரசியல்...

கிய மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாட்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கார்த்திகை மாதம் எமது மக்களுக்கு ஒரு புனிதமான காலம். இலங்கையில் தமிழின பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத காரணத்தால் இராணுவ அடக்குமுறை இடம்பெற்ற காரணத்தால் ஆயுதம் எடுத்து போராட வேண்டிய நிலை தமிழ் இனத்துக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக வரலாற்று நிகழ்வாக ஆயுத போராட்டம் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பாக இருந்தனர். அவர்கள் விடுதலை போரை நடத்தி வந்தார்கள். போராட்டத்தின் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்தவர்கள்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை தமிழ் இனத்துக்காக ஆகுதி ஆக்கியவர்களின் நினைவு நாளாக மாவீரர் நாள் மதிக்கப்படுகிறது. அவர்கள் நினைவாக கார்த்திகை 21 தொடக்கம் 27ஆம் திகதி வரை பல வகையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

விடுதலைக்காக போராடிய இனத்தின் சார்பில் தமிழ் மக்கள் ஆகிய நாம் அனைவரும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது வரலாற்று நிகழ்வு ஆகும்.

எனவே ஒவ்வொரு முறையும் துயிலும் இல்லங்கள், நினைவிடங்கள், அலுவலகங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வந்துள்ளோம்.

ஆனால் அண்மைக் காலமாக இந்த நிகழ்வில் அரசியல் ரீதியாக தலையீடும் குழப்பங்களும் ஏற்பட்டு வருவது மிகவும் துக்ககரமான செயற்பாடாக உள்ளது. பொதுமக்கள் இது தொடர்பில் மனவேதனை அடைகிறார்கள்.

அத்துடன் இந்த நிகழ்வு நாட்களில் புலம்பெயர் நாடுகளில் எமது தமிழ் மக்கள் களியாட்டங்களிலும் ஈடுபடுவதாக அறிய வந்துள்ளது. இது துக்ககரமான விடயம். விடுதலை போரில் தம்மை அர்ப்பணித்தவர்களின் நினைவாக மேற்கொள்ளப்படும் புனித நிகழ்வில் இவ்வாறான களியாட்டங்களை, போட்டிகளை அரசியல் இலாபங்களை அனைவரும் தவிர்க்க வேண்டும்.

அனைவரும் இதை புனித சம்பவமாக அனுஷ்டிக்க வேண்டும். மாவீரரின் தியாகத்தை மதிப்பதாக இருந்தால் எந்தவிதமான அரசியல் கலப்பும் இன்றி அதற்குள் அரசியலுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மாவீரர்களின் உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவர்கள் தலைமையில் நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும். மாவீரர்களை மதிப்பவர்கள் துயிலும் இல்லங்கள் சென்று அஞ்சலி செலுத்தலாம்.

எனவே அனைவரும் ஒன்று பட்டு ஆன்ம ஈடேற்றத்துக்கு உரிய பிரார்த்தனை மேற்கொண்டு அமைதியான முறையில் வன்முறைக்கு இடமளியாமல் அஞ்சலி செலுத்த அனைவரும் முன்வர வேண்டும். மாவீரர் குடும்பங்களை எப்பொழுதும் மதிப்பவர்களாக இருப்பதுடன் வாழ் நாள் முழுவது இந்த தியாகத்தை புரிந்தவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## பேருந்து விபத்து...

னதில் பலர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மரத்தடிகளை ஏற்றி வந்த கப்ரக வாகனமொன்று ஓமந்தை இராணுவச்சாவடிக்கு அருகே வீதியில் தரித்து நின்ற சமயத்தில் அதிவேகமாக வந்த தனியார் பேருந்து கப்ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் தனியார் பேருந்தில் பயணித்த பயணிகள் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

## மின்சாரம் தாக்கி...

வர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை காலை எட்டு மணியளவில் நவிண்டில், கரணவாய் மத்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை சிவகுமாரன் (வயது 42) என்பவரே மரணமடைந்தவராவார்.

காலையில் தமது வீட்டிற்கு அருகாமையில் உள்ள தமது வர்த்தக நிலையத்தில் இருந்த குளிர்சாதனப் பெட்டியை திறந்தபோது அதில் இருந்து மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போது அவர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மரண விசாரணையினை மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டனர். உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-60)

## ரணில்-மோடி...

தேச விமான நிலையத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருடைய பாரியாருக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. இந்தி யாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தலைமை ஒழுங்குமுறை அலுவலர் சஞ்ஜே வர்மா மற்றும் பிரதி ஒழுங்குமுறை அலுவலர் அபிசேக் குக்லா ஆகியோர் நேரில் சென்று வரவேற்றிருந்தனர்.

இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து விசேட பாதுகாப்புக்கு மத்தியில் வாகனப் பேரணியாக புதுடில்லி நகர தாஜ் பலஸ் ஹோட்டலுக்கு சென்றடைந்துள்ளனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்திய அரச தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். (ம)

## பிரபாகரனின் பாதை...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பயணித்த அதே பாதையிலேயே பயணிப்பதற்கு வடக்கிலுள்ள அரசியல்வாதிகளும் மாகாண சபையும் பயணித்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

தேசியக் கொடியை நிராகரித்த வடமாகாண சபை கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் இனியும் மௌனமாக இருக்கக்கூடாது எனவும் அக்கட்சியின் பிரதித் தலைவரும், ஊடகத்துறை பிரதியமைச்சருமான கருணாசேன பரணவிதான தெரிவித்தார்.

அண்மையில் வவுனியா-இரட்டைப்பெரிய குளம் பாடசாலையொன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வடமாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தேசிய கொடியை ஏற்றுவதற்கு நிராகரித்துவிட்டார்.

இந்த செயற்பாடு தொடர்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த கடும்போக்குவாதிகளும் அரசியல் வாதிகளும் கடும் கண்டனம் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஜாதிக ஹெல உறுமய ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதியமைச்சர், தேசியக் கொடியை அவமதித்த வடக்கு கல்வியமைச்சர், நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம)

## பிற்போடுவதற்கு...

கல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஜனவரியில் நடத்துவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. எனினும் தற்பொழுது அது பிற்போடப்பட்டுள்ளது.

எனவே, இந்த தேர்தலை நடத்தாமல் பிற்போடுவது தொடர்பில் நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இனவாத பிரசாரத்தில் ஈடுபடுவோர் குறித்து விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

இனவாத பிரசாரத்தில் ஈடுபடுவோர் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளது. சமூக ஊடக வலையமைப்புக்களில் இனவாத பிரசாரத்தில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

கிங்தொட்டவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது உயிரிழந்தோர் என புகைப்படங்கள் சமூக ஊடக வலையமைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இனவாத பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)

## ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 350 மில். கடன்

(கொழும்பு)

நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்காக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இரண்டு கடன் ஒப்பந்தங்களில் நேற்று கைச்சாத்திட்டுள்ளது.

இவ்விரு ஒப்பந்தங்களின் மூலம், மொத்தமாக 350 மில்லியன் டொலர் நிதி இலங்கைக்கு கடனாக கிடைக்கவுள்ளது.

இக்கடனுதவியின் மூலம் கிடைக்கப் பெறவுள்ள நிதியில் 200 மில்லியன் டொலர்கள் கிராமப்புற வீதி அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிடப்படவுள்ளன. இதன்மூலம் மொத்தமாக 3,400 கிலோ மீற்றர் நீளத்துக்கு வீதிகள் அமைக்கப்படவுள்ளன.

இதில் 340 கிலோமீற்றர் நீளமுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளும் அடங்கும். மேலும், இவ்வீதிகள் எல்லா காலநிலைக்கும் பொருந்தக்கூடிய வகையிலேயே அமைக்கப்படவுள்ளன.

எஞ்சியுள்ள 150 மில்லியன் டொலர்கள் மன்னாரில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் சக்தி நிலையம் ஒன்றுக்காகச் செலவிடப்படவுள்ளது. இவ்வாலை மூலம் சுமார் 100 மெகாவோட் மின்சாரம் பிறப்பிக்கப்படும் என்று தெரியவருகிறது. (ம)

## புதிய ஆயராக...

ஆயராக கடமையாற்றிய கலாநிதி பீடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாக திருத்தந்தை அறிவித்துள்ளதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்தார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வைத்து நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்த அறிவிப்பை மன்னார மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை வெளியிட்டார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் மத்தியில் குறித்த விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் மேலும் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தெரிவிக்கையில்,

கொழும்பு மறைமாவட்டத்தின் முதலாவது துணை ஆயராக கடமையாற்றி வந்த ஆயர் மேதகு கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னான்டோவை மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக திருத் தந்தை நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலை மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை சார்பாக தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

புதிய ஆயரின் பதவியேற்பு நிகழ்வுகள் தொடர்பில் பின்பு அறிவிக்கப்படும் என குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4-281)

## மறைத்து வைக்...

தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, பிரமந்தனாறுக் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது, உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 லீற்றர் கசிப்பைக் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டபிள்யூ.விமல குணரட்ண தெரிவித்துள்ளார். (ம-15)

## சுமந்திரனுடன்...

ஏற்றுக் கொண்டுள்ள சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், சுமந்திரன் விவாதத்திற்கான திகதியையும் இடத்தையும் அறிவிக்குமாறு பதில் சவால் விடுத்துள்ளார். மேலும் கோப் குழு விசாரணைகளில் சுமந்திரன் ஆஜராகி வருவதற்கு கண்டனமும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக பலத்த விவாதங்களுக்கு உட்பட்டிருக்கும் விடயம் கோப் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தற்போதைய விசாரணைகளிலும் ஆஜராகி வருகின்றார். இது உண்மையிலேயே நலன்களுக்கு இடையிலான முரண்பாடாக காணப் படுகின்றது.

இது ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றும் செயற்பாடாகதான் காணப்படுகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றும் முகவராகவே செயற்படுகின்றது. மாறாக எங்கள் தாய்மார்கள் தமது பிள்ளைகளை தேடி கொண்டுள்ளார்கள், அரசியல் கைதிகள் விடுதலைக்காக ஏங்கி கொண்டுள்ளார்கள். உங்களுக்கு வழக்குகளுக்கு ஆஜராக வேண்டும் என்றால், எங்களுக்காக போராடியவர்களுக்கு ஆஜராகுங்கள். அதனை விடுத்து ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றுவதற்காக ஆஜராகுவதை கண்டிக்கின்றோம்.

மேலும் எமது மாவீரர் நினைவு தினங்களை குழப்புவதற்கு யாழில் திட்டமிட்டு குற்ற செயல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் இவற்றுக்கு அஞ்சாமல் ஒன்று திரண்டு எங்கள் மாவீரர்களை நினைவுகூர முன்வர வேண்டும். அடுத்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை தேசிய கொடியை தமது தேசிய கொடியாக அவர்கள் கருத போவதில்லை. கடந்த 2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

அப்போது அந்த விடயம் பெரிதுபடுத்தப்படவில்லை. ஆனால் தற்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், தேசியக் கொடி ஏற்றுவதை நிராகரித்தது மாத்திரம் பெரிதுபடுத்தப்படுகின்றது. இதற்கு அவர் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாற்று அணியாக உருவாகியுள்ளமை காரணமாக இருக்கலாம்.

மற்றும் பிரதானமான விடயமாக புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் ஒன்றும் இல்லை என கூறுபவர்கள் பகிரங்க விவாதத்திற்கு தயாரா என சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் சவால் ஒன்றை விடுத்திருந்தார். நான் சுமந்திரனை இரண்டு கண்ணோட்டங்களில் பார்க்கின்றேன். அவர் ஒரு சிறந்த சட்டத்தரணி. ஆனால் படுமோசமான தமிழ்த் தேசிய அரசியல்வாதி. அவருடைய சவாலை நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராகவுள்ளோம்.

அவருடைய சவாலை ஏற்றுக்கொண்டுள்ள நாம், அவருடன் விவாதத்தில் ஈடுபடுவதற்கு இரண்டு நிபந்தனைகளை விதிக்கின்றோம். ஒன்று அவர் விசேட அதிரடிப்படையுடன் வர கூடாது. அடுத்து விவாதம் பொது அரங்கில் ஊடகங்கள் முன்னிலையில் நடைபெற வேண்டும். எங்கள் தாயகம், சுயநிர்ணயம், தேசியம் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே நாங்கள் விவாதத்திற்கு தயார், சுமந்திரன் திகதியை கூறட்டும். இந்த சவால் மட்டுமல்ல, எந்த சவாலையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள தயார் என சுகாஸ் கூறினார்.(ம-4)

## நல்லிணக்க செய...

யின் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான ஆணைக்குழுவிடம் பகிந்துகொண்டுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, இலங்கைக்கான நல்லிணக்க பொறிமுறையின் செயலாளர் நாயகம் அலுவலகத்தின் இணைப்பாளர் மனோ தித்தவல ஆகியோர் இது தொடர்பான தகவல்களை ஐ.நா. சபையின் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான ஆணைக்குழுவுடன் பகிர்ந்துகொண்டுள்ளது.

நிலையான சமாதானத்திற்காக சமகால அரசாங்கம் முன்னெடுத்துவரும் இணக்கப்பாடு தொடர்பான மறுசீரமைப்பு தேசிய ஐக்கியத்திற்காக தவிர்க்கப்படவேண்டிய வன்முறை தொடர்பிலான விடயங்கள் குறித்து ஆணைக்குழுவிடம் தெளிவுபடுத்தியதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கூட்டத்தில் ஐ.நா.சபையின் சிரேஷ்ட அதிகாரிகள், சமாதானத்திற்கான ஐ.நா. சபையின் ஆணைக்குழுவின் தலைவரும், கொரியாவிற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம)


**BA, Bcom, Bsc, B.B.A (Mediem Tamil)**

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை) வெளிவாரி**

- ✦ மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- ✦ A/L இல் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- ✦ பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளராகிய எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- ✦ இப்பட்ட நெறிகளானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- ✦ BA இல் வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், பொருளியல், பொது நிர்வாகம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவுசெய்ய முடியும்.
- ✦ இக்கற்கைநெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகள் ஆகும்.
- ✦ விரிவுரைகள் ஆரம்பம் : 25.11.2017 காலை 8 மணி

**குறிப்பு:**

01. பொது நிர்வாகம் (Public Administration) பாடமானது அரச உத்தியோகத்தருக்கு சிறந்த தெரிவாகும்.
02. பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப் பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.
03. MA, MCOM, MBA, MSC, PGD ஆகிய பட்டநெறிகளுக்குரிய பதிவுகளும் நடைபெறுகின்றன.

*கவனிக்குக : விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.*

யாழ். இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம், தொ.பே: 0212228148, 0778469721

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (C-4511)



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில் (C-404)



UK-550*/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



**மணமகள் தேவை**

1982, திருவாதிரை, 4இல் செவ்வாய், கிரகபாவம் 26 3/4, France PR உள்ள மணமகனுக்கு (இந்து கௌரவ குடும்பம்) உள்நாடு/ வெளிநாட்டில் உள்ள பொருத்தமான பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 0776557498



**Qatar வேலைவாய்ப்பு**

AC Technician Driver — சம்பளம் 80,000/- க்கு மேல்

இலவச தங்குமிடம் + உணவுக் கொடுப்பனவுகள்

Dubai அச்சக வேலையாள் (பெண்கள்), Mechanical Technician வெற்றிடங்களும் உண்டு

மேலதிக விபரங்களுக்கு 0777 324 004

Trans Gulf (Pvt) Ltd. 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222 www.tgl.lk

Sikaram Academy 175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk



**எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்**



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571



க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான

**இறுதிக் கருத்தரங்கு**

தரம் – 11 O/L - 2017

இடம்:

**Techno World**

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை - யாழ்)

காலம் : 25, 26.11.2017 சனி, ஞாயிறு

| விஞ்ஞானம் | கணிதம் | வரலாறு | தமிழ் | ஆங்கிலம் |
| --- | --- | --- | --- | --- |
| பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் |
| A.சியாமளரூபன் | K.உமாகரன் | R.S.சந்திரன் | க.மு.நித்தி | துசீபன் |
| (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) | (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | (யா/ புனித பத்திரிசியார் கல்லூரி) | (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) |
| 25.11.2017 | 26.11.2017 | 26.11.2017 | 25.11.2017 | 25.11.2017 |
| காலை | மாலை | காலை | மாலை | மாலை |
| 8.30-11.30 | 2.30-6.00 | 8.30-12.00 | 2.30-6.00 | 12.00-2.00 |

- ✱ முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாத்தாள்கள் (விடைகளுடன்) வழங்கப்படும்.
- ✱ முழுப்பாட அலகுகளும் மீட்கப்படும்.
- ✱ மொத்தக் கட்டணம் - 400/=
- ✱ தனிப்பாட அனுமதி உண்டு (100/= ஒரு பாடம்)

(தி-448)

குறிப்பு: வெளி மாணவர்களும் பங்குபற்றலாம் முற்பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 077 017 5346



**மாதம் 50,000 - 200,000/- வருமானம்தரும் வெளிநாட்டு வேலை & விசா ஏற்பாட்டுடன்**

Swiss - UK - Canada - Australia - New Zealand Dubai - Qatar - Kuwait - KSA - Oman - Bahrain (C-473)

Diploma in Tourism & Hotel Management — 10ம் அணி

FAST TRACK (1 - 3 month) Course FEE Rs. 15000/-

FREE ENGLISH, SINHALA & IT அதிதுரித விசேட பயிற்சிநெறி

SIKARAM ACADEMY Business - Hospitality - Marine FAST TRACK to CAREERS

அனுமதிகளுக்கு: 077 36 16 798 021 222 00 11 www.sikaram.lk

175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.